# மறுபக்கம்



மு. தவராஜா Bsc.(Hons)

# மறுபக்கம்

சிறுகதைத் தொகுப்பு

## மு. தவராஜா (B.Sc (Hons)

வெளியீடு:

2

"எழுத்தகம்"

தமிழ் எழுத்தாளர் பேரவை

மட்டக்களப்பு.

1. நூல் பெயர் : ''மறுபக்கம்''
சிறுகதைத் தொகுப்பு
2. முதற் பதிப்பு : ஜனவரி 2005
3. வெளியீட்டாளர் : ''எழுத்தகம்''
மட்டக்களப்பு மாவட்ட
தமிழ் எழுத்தாளர் பேரவை
4. அச்சுப் பதிப்பு : துர்க்கா அச்சகம்
334, திருமலை வீதி, மட்டுநகர்
5. பிரதிகள் : 300
6. பக்கம் : 60
7. உரிமை : ஆசிரியருக்கு
8. கணனிப் பதிப்பு : செ. கண்ணன்
9. பக்க அளவு : 1/8
10. அட்டைப்படம் : ஸ்ரீதர்

விலை ரூபா: 75-

**நூலாசிரியரின் அலுவலக முகவரி :**
மு. தவராஜா
மட்/ வாழைச்சேனை இந்துக்கல்லூரி,
வாழைச்சேனை

**வீட்டு முகவரி :**
25/10, அரசடிப் பிள்ளையார் கோயில் வீதி,
மட்டக்களப்பு.

# அணிந்துரை

இத்தொகுப்பிற்கு அணிந்துரை எழுத முற்படுகின்ற இவ்வேளையில் இவ் எழுத்தாளரது முதற்தொகுப்பான 'மறைமுகம்' நினைவிற்கு வருவதனைத் தவிர்க்கமுடியவில்லை. வித்தியாசமான சிறுகதைகளைக் கொண்ட அத்தொகுப்பு ஈழத்து இலக்கிய உலகில் பரவலாக அறிமுகமாகாமல் மறைமுகமாகவே இருக்கிறது என்ற ஆதங்கமே அதற்குக் காரணம். அத்தகைய ஆரோக்கியமற்ற சூழல் ஈழத்து இலக்கிய விமர்சன உலகின் அசமந்தப்போக்கினால் ஏற்படுவதும், அதுவே யதார்த்தமென்பதும் கசப்பான உண்மைகளாதலின் சற்றுமன ஆறுதல் ஏற்படுகின்றது. இத்தொகுப்பிலுள்ள படைப்புகளும் முன்னையவை போன்று வித்தியாசமான சிறுகதைகளே.

இந்தச் சிறுகதைகளின் வித்தியாசமான தன்மைகள் தான் யாது? 'சுவை தான் புதிது' ஆன தன்மையே அதுவென்று நான் கருதுகின்றேன்.

அந்தச் சுவை புதிதான தன்மை எதனால் ஏற்படுகின்றது?

ஆழ்ந்து யோசிக்கும்போது, இவை அனைத்திலும் மனிதர்களோடு விலங்குகளும் பாத்திரமாக இடம் பெற்றுள்ளமையே அதற்குக் காரணமென்பது புலப்படுகின்றது; ஒரு படைப்பிலே மாடும் ஏனையவற்றிலே நாய்களும் இடம்பெற்றுள்ளன.

இவ்விலங்குகள் சில சிறு கதைகளில் முக்கியமான பாத்திரங்கள் சிலவற்றிலே முக்கியமான இடத்தைப்பெறுபவை; சிலவற்றிலே அவ்வாறமையாவிடினும் மறக்கமுடியாத இடத்தைப் பெறுபவை. இவ்வாறு விலங்குகள் பாத்திரமாகத் திகழ்வதனால் மட்டும் இச்சிறுகதைகள் கவனிக்கப்படவேண்டியன ஆகிவிடுகின்றனவா?

அப்படியன்று

இவை ஏதோ விதத்திலே மனிதருடன் உறவு கொண்டுமுள்ளன. மனிதரது உணர்வுகளுடனும் மனிதரது நடத்தைகளுடனும்

தொடர்புபட்டுள்ளன. மனித செயற்பாடுகளின் பொய்மைகளை அம்பலப்படுத்துகின்றன. மெய்மைகளை துலங்கச்செய்கின்றன. விளைவாக, புதிய சுவை எம்மை ஆட்கொள்கின்றது.

இவ்விடத்தில் இவ்வாறு விலங்குகளை முதன்மைப்படுத்து கின்றவாறான ஏனைய தமிழ்ப்படைப்புகள் உள்ளனவா என்றொரு கேள்வி எழுகின்றது. சோலைக்கிளி, 'அம்ரிதா ஏயெம்,' கி. ராஜநாராயணன் ஆகியோர் எனது ஞாபகத்திற்கு வருகின்றனர்.

சோலைக்கிளி கவிஞர். இவரது கவிதைகளினுள் கணிசமானவை விலங்குகள், மரங்கள் ஏனைய அ்.றிணைப்பொருட்களின் கண்கொண்டு சமூகப்பிரச்சினைகளை பார்ப்பவை. எனினும் கவிதை என்ற வடிவத்திற்குரிய தனித்துவ இயல்புகள் காரணமாக இவைதரும் அனுபவங்கள் வேறுபட்டவை.

'அம்ரிதா ஏயெம்', சிறுகதை. ஆசிரியர் இவரது படைப்புகளில் வரும் விலங்குகளும் படைப்புக்களில் முக்கிய இடம் பெற்றிருப்பினும். எழுத்தாளரது ஆற்றலும் ஆளுமையும் கூடவே உயிரியல் விஞ்ஞான அறிவும் - காரணமாக இந்நூலாசிரியரது படைப்புக்கள் தரும் அனுபவங்களை விட பிறிதொரு நிலைப்பாட்டின் அனுபவங்களையே தொற்றவைக்கின்றன. நான் அறிந்தவரையில் கி.இராஜநாராயணன் தனது கிராமத்தில் உள்ள ஐந்து நாய்களை வைத்து ஐந்து கதைகளை மட்டும் தந்துள்ளார்.

அவை இம்மூவரது படைப்புக்களைவிட அழியாத சித்திரங்களாக இச்சிறுகதைகள் உள்ளன என்றே கூறவேண்டும்.

சோலைக்கிளி அம்ரிதா ஏயெம் ஆகியோரது பிற்காலப்படைப்புக்களில் உள்ள இருண்மைத்தன்மை இவ்வாசிரியரது படைப்புக்களில் தலை தூக்குகின்றது என்ற விதத்தில் இம்மூவரும் ஒன்றிணைகின்றனர்!

எனினும் இவ் இருண்மைத்தன்மையை படைப்புக்களின் குறைபாடு என்று உடனடியாக தீர்மானித்துவிட முடியாது. ஏனெனில் சில படைப்புக்களின் நோக்கம் முழுமை எய்துவதற்கு அது அவசியமாகின்றது; பலமாகின்றது. இவரது படைப்புக்களுக்கும் இது பொருந்துகின்றது. முதல் வாசிப்பில் எம்மால் தெளிவுபெறமுடியாவிடில் மறுபடி மறுபடி வாசிக்கலாமல்லவா? ஒரு கணக்கில் பிரச்சினையை விடுவிக்கமுடியாவிடின் - கணக்கு பிழைக்குமெனில் மறுபடி மறுபடி முயன்று சரியான விடையைக் காண்கின்றோமல்லவா?

இச்சிறுகதைகளின் எடுத்துரைப்பு முறை, மொழி நடை செறிவுத்தன்மை என்பனவும், அவை புதிதான அனுபவத்தை அதிகரிக்கவைக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தவிர இத்தொகுப்பிலுள்ள படைப்புக்களில் ஒன்றான 'அசலும் நகலும்' பற்றி முன்னரே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கவேண்டும்' விஞ்ஞான புனைகதைகள் மிகவும் அபூர்வமாகவே வெளிவந்துள்ள ஈழத்து இலக்கியச் சூழலில் அவ்வாறான 'அசலும் நகலும்' கவனத்திற்குரிய படைப்பாகின்றது. இவ்விதத்தில் இத்தொகுப்பில் சிறந்த சிறுகதையாகவும் அது மிளிருகின்றது.

ஆகவே, ஈழத்திலே வித்தியாசமான சிறுகதைகளைத் தருகின்ற அண்மைக்கால புதிய தலைமுறை எழுத்தாளர்களான திசேரா, அம்ரிதா ஏயெம், கௌரிபாலன், இராகவன் வரிசையில் இனி இவ்வாசிரியரைச் சேர்த்துக்கொள்ளமுடியுமென்பது எனது துணிவு.

மறைமுகமாகவுள்ள இவ்வெழுத்தாளரை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் பொறுப்பு எமது அனைவருடையதுமே.

வாழ்த்துக்களுடன் கலாநிதி
செ. யோகராசா

தலைவர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை, இலங்கை

# வாழ்த்துரை

ஒரு மனிதனுடைய நிலைக்கு ஏற்ப அவனது நினைப்பு இருப்பதில்லை . மாறாக தாழ்ந்த நிலையில் இருப்பவன் உயர்வாக எண்ணுவதும், உயர்நிலையில் இருப்பவன் தாழ்வாக எண்ணுவதும் இயல்பு இயற்கை.

இந்த வகையிலே இந்நூலாசிரியரான திரு மு. தவராசா BSc (Hons). அதிபர் ஐயா அவர்களும் உயர்வான கல்விப் பீடத்திலே பல நூறு மாணவ மாணவியர்க்கு அறிவூட்டும் ஆசிரிய தலைமைப் பீடத்திலே அமர்ந்திருந்தாலும், அவருடைய சிந்தனைகள் என்றும் தாழ்நிலையிலே தவழ்ந்து ஊர்ந்து, பல இன்னல் இடர்களிலே பட்டுழன்று அழிந்தொழியும் அஃறிணை உயிர்களையும் அச்சீவன்களின் உண்மை நிலைகளையும் மனிதாபிமான முறையிலே படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

எவரெவர் எங்கு எந்நிலையில் இருந்தாலும், பேராசிரியர் திரு. சி.மௌனகுரு ஐயா ஒரு காலத்தில் கூறியது போல் ''நதிகளெல்லாம் உயர்ந்த, உயரமான மலைகளிலே பிறக்கின்றன. ஆனால், தாங்கள் உயர்வான இடத்திலே பிறந்துவிட்ட காரணத்தினால் மமதை கொண்டு அங்கிருந்தபடியே நேரே விண்ணூடாக வந்து கடலில் வீழ்ந்திருக்கலாம். மாறாக இறங்கித் தவழ்ந்து மண்மீது வந்ததின் காரணமாகவே தான் இந்த மண்ணும், மண்மீதுள்ள உயிர்கள், பயிர்கள், செடி, கொடி தாவர விலங்கு போன்ற அனைத்தும் வாழவழி பிறந்தது" என்றார்கள். அது போலவே உயர்வான இடத்திலிருப்பவர்களெல்லாம் இறங்கிச் சிந்தித்து மண்மீதும் மண்ணில் உள்ள உயிர் மீதும் அன்பு, பாசம் கொண்டு அவைகளுக்குத் தங்களினாலான பங்களிப்பை எந்த வகையிலாவது செய்யவேண்டும். அப்போது தான் மானிடப் பிறவியின் உயர்வை எண்ணிப் பெருமைப்படலாம்.

மானிடப்பண்பின் அன்புள்ளத்தினாலே கடையேழுவள்ளல்களில் பேகன்

மயிலுக்குப் போர்வை ஈர்ந்தான், பாரி முல்லைக்குத் தேர் நிறுத்தினான். என்றும் வாடிய பயிரைக்கண்டு வாடினார் வள்ளலார், இராமலிங்க அடிகள், என்றும் படிக்கின்றோம். உயிரினங்களின், அவலவாழ்வினை எண்ணி இரங்கியதனாலேதான் அதனை உலகின் முன், மக்களின் மனக்கண்முன்கொண்டுவந்து காட்டவேண்டுமென்ற எண்ணப்பாங்கின் விளைவாக பலர் சிந்தித்துச்செய்யமுன்வராத ஒன்றை ஐயா அவர்கள் செய்துள்ளார்.

இதைப் பற்றியெல்லாம் எண்ணலாமா? எழுதலாமா? என்று இழிவாகப் புறந்தள்ளிவிட்டு பெரும் பெரும் மாடிவீட்டு மேட்டுக்குடியினரின் *வாழ்வையும்,* வளத்தையும் அங்கு வாழ்வோரையுமே கதாபாத்திரங்க ளாக, கதைக்கான, கற்பனைக்கான கருப்பொருளாகக் கொண்டு எண்ணி எழுதி வந்தமுறைக்கு வித்தியாசமாக காட்டப்பட்டுள்ள ''பதினாறும் பெற்று, 'நிம்மி,'' கதைகளில் வரும் பாத்திரங்களைப் படிக்கும்போது பழம்பெரும் எழுத்தாளர் திரு. சுந்தரராமசாமி, புளியம் மரத்தையும், இன்னும் இவர் போன்ற எழுத்தாளர்களின் பெயர்கள் நினைவில் இல்லாவிட்டாலும் அவர்களால் எழுதப்பட்ட முருங்கைமரம், அரசமரம் போன்ற கதைகளைப்படித்த உணர்வுகளை விட இன்னுமோர்படி மேலோங்கி இச்சீவன்களின் வாழ்க்கை நிலையை ஐயா அவர்கள் காட்டியுள்ளபடி பார்க்கும்போது உள்ளம் நெக்குநெக்காக உருகி கண்ணீர் மல்கவேசெய்கின்றது. அதாவது

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றியான்''

என்று வள்ளுவப்பெருந்தகை படைப்புக்கடவுளையே நோக்கி இட்ட சாபம் முற்றும் சரியானதே என்றுதான் சொல்லவேண்யுள்ளது; மனிதனை அண்டிவாழாது பெரும் பெரும் காடுகளிலே வாழும் கரடி, புலி, சிங்கம், யானை, மரை, முயல் போன்ற எண்ணற்ற ஜீவராசிகள் ஏதோ தாங்கள் வாழும் சூழ்நிலை, தட்ப வெப்பங்களுக்கெல்லாம் தங்களைத் தயார் படுத்தித் தக்க வைத்து வாழும்போது

அதே நேரத்தில் மனிதனின் துணை கிடைக்குமென்ற நிலையில் மனிதனை அண்டி வாழும் மாடு, ஆடு, கோழி போன்றவற்றை மனிதனே வளர்த்து இறைபக்தி, தானம் என்ற பெயரால் பலி கொடுப்பதும் தமது உணவிற்காக அவைகளின் பால் நெய், முட்டை இறைச்சியென வெட்டி உண்டு அழித்தும், அதேவேளை உணவிற்குப் பயன்படாமலும் பலி தானம் கொடுக்க முடியாமலுமுள்ள நாய், பூனை போன்ற ஜீவன்களும் மனிதனால் வளர்க்கப்பட்டு ஆண், பெண் என்ற தாழ்வு மனப்பாங்கில் பகுப்பாய்வு செய்யப்பட்டு உதவக்கூடியதும், உற்பத்தியற்றதுமான ஆண் வர்க்கத்தை வீட்டிலும், பெண் வர்க்கத்தைக் குப்பை மேட்டிலும் வீசி எறியும் ஈவு இரக்கமற்ற தன்மையை உன்னதமான உண்மையான ஜீவகாருண்யத்தோடு தடங்காட்டும் ஐயா அவர்களின் சிந்தனையும், செய்கையும் ஓர் வித்தியாசமானது, இவரது முந்திய வெளியீடான 'மறைமுகம்' என்ற சிறுகதைத் தொகுப்பும் இத்தன்மையானதே.

இக்கதைகளைப் படிக்கும்போது தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளர் கோணங்கியின் கதைகளைப் படிக்கும் உணர்வே ஏற்படுகின்றது. ஐயா அவர்கள் இந்த அஃறிணை உயிர்கள் மீது காட்டும் அன்பு போன்று அனைத்து உயிர்கள் மீதும். மனிதர்கள் மீதும், காட்டும் அன்பும், ஏற்றத்தாழ்வற்ற இயல்பான நடைமுறையும் பல அறிஞர்கள் மேடைப்பேச்சிலும், நூல்களிலுமாகச் சொல்லிய சமத்துவத்தை நான் ஐயா இவர்களின் செயலில் கண்டு தலைவணங்கி வாழ்த்துகின்றேன். போற்றுகின்றேன்.

**என்றும் மனிதநேயமுடைய**
**ஆ.மு.சி. வேலழகன்**

காளிகோயில் வீதி,
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.

# வெளியீட்டுரை

எமது பேரவையின் ''சில்லிக்கொடி ஆற்றங்கரை'' நாவல் வருகையோடு நாம் வெளியீட்டாளர் என்ற அந்தஸ்தினைப் பெற்றோம். அந்த நாவல் வெளியீட்டின் களைப்புத் தீருமுன் மீண்டும் ஒரு சிறுகதைத் தொகுப்பினை மலர்விக்கின்றோம். உடலில் மெல்லிய வலியானாலும், மனமெல்லாம் மகிழ்ச்சி. சாதனைப் பயணத்தின் அடுத்த அடியெடுப்பு.

இந்த வெளியீட்டோடு நாம் ''எழுத்தகம்'' என்னும் பெயர்தாங்கி மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு மேலும் ஒரு பரிமாணம் பெறுகின்றோம்.

வெளியீட்டு முயற்சியின் அழைப்பை ஏற்று எம்மை நாடுவோர் பலர் ; காலமும் நிதிவளமும் கை கொடுத்தால் அனைத்தும் கைகூடும்.

மாவட்டம் சார்ந்த எமது சேவை மட்டுநகரின் மையத்தில் மட்டுமின்றி ; வடக்கே வாழைச்சேனை வரை பரவுகின்றது. என்பதன் அடையாளமே இந்தச் சிறுகதைத் தொகுப்பு.

வாழைச்சேனைப் பிரதேசத்தின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான மு. தவராஜா அவர்கள் ஏற்கனவே ஒரு சிறுகதைத் தொகுப்பினைத் தந்தவர். அந்த வகையில் அவருக்கும் எமக்கும் இது இரண்டாவது முயற்சியாகும். தற்கால சிறுகதைக் களத்தில் அவரின் முயற்சி தனித்துவமானது. என்பதனை இத் தொகுப்பினை வாசிக்கும் போது ஏற்றுக்கொள்வோம்.

அவரது மிகுந்த ஆர்வமும் எதற்கும் சம்மதிக்கும் தகுந்த பொருத்தப்பாடுடைய மனப்பாங்கும் எமக்குப் பேருதவியாக அமைந்தது.

இந்த இரண்டாவது கனிதலுக்குக் காரணமான அனைவரையும் உள்ளத்தில் நிலை நிறுத்தி மீண்டும் சந்திக்கும் நம்பிக்கையோடு இந்தத் ''மறுபக்கம்'' சிறுகதைத் தொகுப்பினைக் கையளிக்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்ட
தமிழ் எழுத்தாளர் பேரவை
மட்டக்களப்பு.

01.12.2004

# என்னுரை

எழுதுதல், உறுதிப்படுத்துதல், அச்சிடுதல், வெளியீடுதல் எனும் நான்கு அம்சங்களைக்கொண்டது ஒரு நூல் வெளியீடு ஆகும். வெளியீட்டின் போக்கு எவ்வாறு அமையுமென்பது விமர்சனத்தைப் பொறுத்தே அமைந்துவிடுகின்றது. இக்கூட்டுமுயற்சியில் பலரையும் நினைவு கூறவேண்டிய கடமை எனக்கு நிறையவே உள்ளது. அந்த வகையில் எழுதத்தூண்டியவரும், உறுதிப்படுத்தியவருமாகிய பெறுமதிமிக்க முன்னுரையை வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி செ.யோகராசா அவர்களுக்கும்,

மட்டக்களப்பு மாவட்டத்தின் முதுபெரும் எழுத்தாளரும், முற்போக்குச் சிந்தனையாளரும், கவிஞரும் ஆகிய திரு. ஆ.மு.சி. வேலகழன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி அச்சுப்பதிப்பின் ஆரம்ப கட்ட வேலைகளை ஒழுங்குபடுத்தியமைக்காக அவர்களுக்கும்,

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையின் உபசெயலாளரும், கோறளைப்பற்றுப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும், கவிஞருமாகிய திரு. அன்பழகன் குரூஸ் அவர்கள் பிழை திருத்தம் செய்து புத்தக ஒழுங்கமைப்பை மேற்பார்வையும் செய்து அச்சுப்பதிப்பு ஒழுங்குகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டமைக்காகவும், வெளியீட்டு வேலைகளை திறம்பட ஒழுங்கமைத்த அவர்களுக்கும்,

ஆரம்பத் தட்டச்சு வேலைகளில் உதவி புரிந்த மட்/ வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் தொண்டர் சேவையில் உள்ள திரு. க. ரஞ்சன் மற்றும் அட்டைப்படம் உட்பட புத்தக வடிவமைப்பில் ஆர்வம்கொண்டு உழைத்த ''இலக்கிய'' சஞ்சிகையின் ஆசிரியரும், எழுத்தாளருமான திரு. சு.அ. ஸ்ரீதர் ஆகியோருக்கும்,

புத்தகத்தின் முழு அமைப்பினையும் கணனியில் வடிவமைத்த செ. கண்ணன் அவர்ளுக்கும், அச்சுப்பதிப்புச் செய்த துர்க்கா அச்சக உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் தனித்தனியாக நன்றிகூறு வதோடு, நூலைப்பெற்று ஊக்கிவிப்புத் தரவிருக்கின்ற அன்பான வாசகருக்கும் அன்பு கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மு. தவராஜா

# முகாமைத்துவம்

''சேர், ஐ வில் ரேக் திஸ் மெற்றர் அஸ் ஏ சலஞ்''என ஆங்கிலத்தில் அழகிய இனிய குரலில் கம்பீரமாக அதிபரைப் பார்த்து நிமிர்ந்து நின்று கூறினாள். அமலா.

மூவாயிரம் மாணவர்களையும் நூற்று முப்பது ஆசிரியர்களையும், இருபத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பையும் கொண்ட மிகவும் பிரபல்யம் வாய்ந்த கல்லூரியின் அந்த அதிபர் அமலாவைப் பார்த்தபடியே மௌனமாக நின்றார்.

எந்த விடயமும் நிலையானதல்ல ஒரு நிலையில் தான் ஒருவர் எப்போதும் நின்று வாதிப்பதுமில்லை. ''றை யுவ வெ(b)ஸ்ற் அன்ட் குட்லக். கோட் பிளஸ் யூ''. என்று மட்டும் அமைதியாக அழுத்தமாகக் கூறி வைத்தார் அதிபர்.

ஆனந்துடன் அதிகம் நெருங்கிப் பழகவேண்டாம் என்று அடிக்கடி தோழிகள் கூறக்கூற ஏனோ தெரியவில்லை அமலாவின் மனம் அவனை மிகமிக நெருங்கியே சென்றது.

அந்த பெரிய பாடசாலை ஒரு நந்தவனம் போன்றது அமெரிக்க மிசன் பாடசாலையாக இருந்து அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலையானாலும், இன்னும் அது மிகவும் உயர்ந்த நிலையிலேயே இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அப்பாடசாலையில் இல்லை என்று கூறுவதற்கு எதுவுமே இல்லை. சகல விளையாட்டுக்களுக்கும் உரிய பயிற்சிக் கூடங்களும் பயிற்றுவிப்பாளர்களும் உள்ளனர். விரும்பிய மொழியைப் பிள்ளை கற்கலாம், விரும்பிய துறையில் தங்களை வளர்த்துக்கொள்ளலாம்.

அமலா அந்தஸ்த்தும் அழகும் உள்ளவள், நல்லவள் ஆனந்த் அந்தஸ்த்து உள்ளவன் சுமாரான அழகுள்ளவன், நல்ல கால் பந்தாட்ட வீரன், அமலா வலைப்பந்தில் சிறந்து விளங்கினாள். இருவரும் கல்வியில் சிறந்து விளங்கினர். இருவருக்கும் அழகியலில் ஆர்வம் இருந்தது.

அது ஒரு வேகமாகவும் விவேகமாகவும் முறையாகவும் இயங்கும் பாடசாலை. மாணவர் கலாசார மையத்தை அங்கு காணலாம்.

ஆனந்தைப் பற்றி அமலாவும், அமலாவைப் பற்றி ஆனந்தும் அறிந்து கொள்ள நிறையச் சந்தர்ப்பங்கள் இருந்தன.

ஆனந்தின் ஆளுமையில் சிக்கிய அனேக நல்ல பிள்ளைகள் விட்டில் பூச்சிகளானது பெரிய விந்தை இல்லை.

அமலா ஒரு வித்தியாசமான பிள்ளை பெண்மையோடு கூடிய ஆளுமையுள்ள பெண் சாதனையாளராக வர விரும்பினாள்.

அமலாவின் நடை சாதாரணமான பெண் மாணவிகளை விடவும் மிகவும் மேலோங்கி இருந்ததை ஆனந்தும் கவனிக்கத்தான் செய்தான்.

அமலா அளவிற்கு அதிகமாக அவனோடு நெருங்காவிட்டாலும் அடுப்புச் சூட்டிற்கும் சுவையான கறிக்கும் இடையேயுள்ள சட்டியின் வேலையையும் சிறந்த சமையல்காரனின் வேலையையும் ஒத்த ஒரு வேலைத்திட்டத்தை திட்டமிட்டு செயல்படுத்தி பரீட்சித்துப் பார்த்ததில் சிறிது வெற்றியை அடைந்ததாக அவள் நினைத்தாள்.

பெண்களில் ஆண்கள் அதிகமாக ஏமாந்து போகின்றனரா? அல்லது ஆண்களில் அதிகமாகப் பெண்கள் ஏமாந்து போகிறார்களா? என்பது விவாதத்திற்குப் பொருத்தமான தலைப்பாக இருந்தாலும் மேடைப் பேச்சில் வீரம் விளைவிக்க அமலா விரும்பவில்லை.

ஆனந்தைத் திருத்தும் முயற்சியில் அவள் வெற்றி கொண்டு அதன்பின் ஆத்மார்த்தமானதொரு அன்புப் பிணைப்பு ஏற்பட வாய்ப்பிருந்தால் அவனை தன் துணையாக ஆக்கிக்கொள்ள அவள் விரும்பினாள். நாணயத்திற்கு எப்போதும் இருபக்கம் என்பதில் விவாதத்திற்கு இடமில்லையல்லவா? பத்தாம் வகுப்பில் தொடங்கிய பந்தம் நான்கு வருடங்களாக மேடையேறக் காத்திருக்கும் நாடகம், நல்லபடி அரங்கேற வேண்டும் என இருவரும் நினைக்கும் அளவிற்கு நட்பு வளர்ந்திருந்தது.

அமலாவும் ஆனந்தும் அக்கறையோடு கல்வியைத் தொடர்வதற்கான திட்டங்களைப் பரிமாறிக்கொண்டனர். இருவருமே வைத்தியர்களாக விரும்பினர். விளையாட்டு வீரர்களின் எலும்பு மூட்டுக்களின் உபாதையினைக் குறைப்பதற்கான ஆராய்ச்சியாளராக வர அவன் விரும்பினான். பெண்கள் சம்பந்தமான மரபியல் வளர்ச்சிப் போக்கில் தெளிவு பெறும் வகையில் அவர்களின் பண்பியல் வளர்ச்சியில் நல்ல மாறுதலுக்காக ஆராய்ச்சி செய்யக்கூடிய நரம்பியல் வல்லுனராக வர அமலா விரும்பினாள்.

பதிமூன்றாம் வருடப்படிப்பும் முடிந்து பரீட்சைக்கான நாட்கள் குறையக் குறைய படிக்கும் திறனை இருவரும் அதிகரித்தனர். இலட்சியத்தின் முதல் இலக்கினை அடைவதில் இருவரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். பரீட்சை தொடங்கிவிட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் வாழ்த்திக்கொண்டு பரீட்சை எழுதத் தொடங்கினர்.

தவணை முடிவுற்று பரீட்சைத் திணைக்களத்தின் தேவைகளுக்காகப் பாடசாலையில் இடம் பெறவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கூட்டமொன்றினை அதிபர் கூட்டியிருந்தார்.

பிரதி அதிபர்கள், கல்விசாரா அதிகாரிகள், ஊழியர்கள் யாவரும் அதில் கலந்து கொண்டனர். தான் வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்று

மூன்று மாதங்கள் லண்டன் செல்வதாகவும் பிரதி அதிபர்களின் மேற்பார்வையில் பாடசாலை இருக்கும். முகாமைத்துவ உதவியாளர்களினதும் ஏனைய ஊழியர்களினதும் கடமைக் கூறுகளின் முக்கியத்துவத்தை விளக்கிய அதிபர் விடுமுறைக் காலத்திற்குரிய வேலைகளுக்குரிய நேரசூசியினையும் தயாரித்து வழங்குமாறு பிரதி அதிபர்களில் முக்கியமானவரிடம் கூறியிருந்தார்.

ஆறு பரீட்சை மண்டபங்கள் அப்பாடசாலையில் அமைந்திருந்தது. வெளிப்பாடசாலைகளில் இருந்து அங்கு பரீட்சைக்காக மட்டும் முதன் முதலில் வந்த மாணவர்கள் பாடசாலையின் கவின்நிலை அழகு கண்டு மூக்கில் விரல் வைத்தார்கள்.

அது ஜப்பானின் முகாமைத்துவ அமைப்பின் ஐந்து எஸ். முகாமைத்துவ நடவடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலாமிடம் பெற்ற பாடசாலை. மாணவர்களின் கைகளில் ஊத்தைகள் படாதவகையில் உபயோகிக்கக் கூடிய வகையில் குப்பைத் தொட்டிகள். கூட அங்கு அமைக்கப்பட்டிருந்தன. மருந்திற்குக்கூட காக்கைகளோ, நாய்களோ வராதபடி வளாகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

பரீட்சைக் காலங்களில் ''உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கொட்டான்'' எனும் நிலை அப்பாடசாலையில் தோற்றம் பெற்றது.

ஆசிரியர்களைப் போன்று தாங்களும் விடுமுறையில் நிற்கவே கல்விசாரா அனைத்து ஊழியர்களும் விரும்பினர். தங்களது கடமையை புறக்கணிக்கும் நிலை அங்கு காணப்பட்டது. சிலர் சாட்டுக்கு வந்தனர். எவ்வளவோ தடவைகள் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆகியோர் கேட்டுக்கொண்டாலும் முகாமைத்துவ உதவியாளர்கள் பாடசாலைக்கு வரவில்லை. காவலாளி கூட கவலையற்று இருந்தான். விளைவு எப்படியோ ஒரு சோடி நாய்கள் உள்ளே நுழைந்துவிட்டன.

நூற்றுக்கணக்கான மாணவர்கள், மற்றும் பரீட்சை மேற்பார்வை யாளர் மற்றும் பரீட்சை இணைப்பு நிலைய ஊழியர்களின் உணவுப் பொட்டலங்களின் எச்சங்கள் கட்டிடங்களின் ஓரங்களில் வீசப்பட்டிருந்தன. அந்த உணவு மீதிகளைப் பற்றிக்கவலைப்பட அந்த இரு நாய்களையும் தவிர வேறு யாரும் இல்லை. அவை இரண்டும் நன்றாக உண்டு களித்து பொழுது போக்கின. அச்சோடிக்கு எதிலும் போட்டியில்லை. ஓய்வு எடுத்து சினேகம் கொண்டாடி இனிது வாழ்ந்திருந்தன.

உயிரியல் இரண்டாம் பத்திரப் பரீட்சையன்று அந்த இரு நான்கு கால் சீவன்களும் மிகுந்த உற்சாகத்துடன் சந்ததி விருத்தியில் ஈடுபட்டிருந்த சமயம் ஆனந்த் பக்கவாட்டில் தலையைச் சொறிந்தவாறு திரும்பியவன் அக்காட்சியைக் கண்டுவிட்டான். ஒரு பத்து நிமிடம் அதனையே பார்த்திருந்தான். மீண்டும் சுய நினைவிற்கு வந்து பரீட்சையில் மூழ்கினான். பரீட்சை முடிந்துவிட்டது. ஆனந்தும் அமலாவும் விளையாட்டிலும் வீட்டிலும் கவனம் எடுத்தனர். ஆனந்தின் வீட்டாருக்கு ஆனந்த் வீட்டில் தங்கியிருந்து தன்னுடைய சில தேவைகளைத் தானே கவனிக்க ஆரம்பித்திருந்தது எட்டாம் உலக அதிசயமாக இருந்தது.

பல்கலைக்கழக அனுமதியில் அமலாவிற்கு எம்.பி.பி.எஸ். ஆனால் ஆனந்திற்கு மிருக வைத்தியர் பிரிவு கிடைத்தது. இடிந்து போனவன் பரீட்சையில் அந்தப் பத்து நிமிடங்களைச் சபித்தபடி பிரமையோடு சில நிமிடங்களைக் கடத்தினான்.

அமலா பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். ஆனந்த் தெரு நாய்களையெல்லாம் விரட்டி அடித்ததோடு உள்நாட்டு அரச நிறுவனங்களுடன் தொடர்பு கெண்டு தெரு நாய்களை அழிக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்கினான். அவனுடைய கண்கள் ஏதாவது தெரு நாயைக் கண்டு விட்டால் அவை பிணமாவது நிச்சயம். ஆனந்த் வாழ்ந்த பிரதேசத்தில் எஜமானின் பிடியில் இருந்தபடியே வீதிக்கு உலாவரும் சிறந்த வளர்ப்பு நாய்கள் கூட ஆனந்தின் மணத்தை

முகர்ந்து ஒதுங்கி நின்று வழிவிடும் அளவுக்கு அவன் நாய்களின் எதிரியாகிவிட்டான். செய்தி அப்படிப் பரவியிருந்தது. தப்பித்தவறி அவனுடைய உருவம் கண்ணில் பட்டால் கிடைத்த இடத்தில் வாலைச் சுருட்டியபடி அனுங்கிக்கொண்டு ஒரு சில நாய்கள் மறைந்திருந்ததும் உண்டு.

அவனுடைய சுற்றாடலில் இப்போது தெரு நாய்த்தொல்லையே இல்லை. சாலைகளில் எல்லோரும் நிம்மதியாக நடந்து செல்கின்றனர்.

எவ்வளவு காலத்திற்கு நாய்களைக் கொல்லுவதும் அடித்துக் துரத்துவதும் ஆளுமைமிக்க இளைஞர்களுக்குப் பொருந்தும் எனும் வினாவை அமலா அவனது மனதில் புதைத்துவிட்டாள்.

பணம் அவனுக்குப் பிரச்சினை இல்லை, ஆனாலும் அவன் இப்பொழுது மிகுந்த முரண்பட்ட மனத்தை உடையவனாக இருக்கிறான். என்பது அமலாவிற்குப் புரியும்.

நீண்ட காலமாக ஆனந்தும் தந்தையும் நேருக்கு நேர் சந்திக்காமலே பழகிவிட்டனர். ஆனந்தின் குரங்குச் சேட்டைகளுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் அவர் வாழ்ந்தார். அதுவே பின் பழக்கமாகிவிட்டது.

ஆனந்தின் அம்மாவோடு அமலா தொடர்பு கொண்டதன் விளைவாக ஆனந்த் ரஸ்யாவில் எம்பி.பி.எஸ் படிக்க ஓரளவு இசைந்து வருகிறான்.

தனது பாடசாலையின் மூன்று மாத வரலாற்றை அறிந்து கொண்ட அதிபர் லண்டனில் பிரிட்டிஸ் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க முயல்கின்றார்.

# நெற்றிச் சுருக்கம்

ரியூசன் கிளாசை நோக்கி ஒரு விசர்நாய் ஓடி வந்து கொண்டிருந்தது. அது வந்து கொண்டிருந்த வழியெல்லாம். தொடர்ச்சியாக நாய்கள் குரைக்கும் ஒசை கேட்டுக்கொண்டிருந்து.

ரியூசன் கொட்டில்களின் ஓரத்தில் ஒதுங்கியிருந்த சுற்றுவட்டார நாய்கள் வாலைச் சுருட்டிக்கொண்டு குரைத்தபடியே ஓடி மறைந்தன.

கொட்டில் மேசைகளின்மேல் மாணவர்கள் எல்லோரும் இரைந்த படியே ஏறிக்கொண்டனர். நடுங்கியபடி சிலரும், சேட்டைக்காகச்சிலரும் கூச்சலிட்டனர். நான்கைந்து மூர்க்கமுள்ள மாணவர்கள் விசர்நாயை நோக்கிக் கற்களை வீசினர். அந்த நாய் மெதுவாகத்திரும்பி அவர்களுக்கு அதன் பற்களைத்திறந்து காட்டியது. கல்லெறிந்தவர்கள் ஓடிச்சென்று மேசைகளின் மேல் பாய்ந்து ஏறினர்.

மீண்டும் அந்தநாய் நாக்கை வெளியே நீட்டிக்கொள்ள வால் தொங்கியபடி மெதுவாக ஓடிச்சென்றது. அங்கு ஆறேழு ரியூசன் மாஸ்டர்கள் இருந்தும் ஒருவருக்கு மாத்திரம் அந்தநாயை அழித்துவிட வேணும் எனும் எண்ணம் வலுப்பெற்றது. புதிய கொட்டிலுக்கு கிடங்கு கிண்ட கொண்டு வந்திருந்த இரும்பு அலவாங்கை எடுத்துக் கொண்டு நாய்போன திசையில் ஓடிச்சென்றார். ஏனைய மாஸ்டர்மார் கைகளைக் கட்டி ஒரு கையினை வாயில் வைத்தபடி புதினம் பார்த்தனர்.

சேர் போனதைக்கண்ட மாணவர்கள் கொட்டில்களில் இருந்து வெளியே வந்து என்ன நடக்கப்போகிறதோ என ஏங்கிக் கொண்டு சிலரும், கூச்சலிட்டபடி பலரும் நின்றனர்.

ஓடிக்கொண்டிருந்த நாய் துரத்தியவரை நோக்கித் திரும்பி வந்தது. தலையில் ஒரே அடி. கண்களைத் திறந்தபடி நாய் வீழ்ந்து கிடந்தது. மீண்டும் ஓர் ஒங்கிய அடியில் தலை பிளந்து இறந்துபோனது அந்த நாய்.

யாரையும் நெருங்கவிடாத அவ்வாசிரியர் தானே தனித்து பெரிய கிடங்கு வெட்டி அந்த நாயைப்போட்டு மேல்புற மண்ணையும் இழுத்து

முடினர். டெட்டோல் வாங்கி வரும்படி கூறி அலவாங்கை நன்றாக கழுவிவிட்டார். பக்கத்தில் இருந்த குப்பைகூழங்களைப் புதைகுழிக்கு மேல்பரப்பி தீயிட்டுக் கொழுத்திவிட்டார்.

நாயை அடித்ததற்காக அவர் மனம் சிறிது நொந்தாலும் தான் செய்தது மிகவும் சரியானது என அவர் நினைத்தார். உண்மையும் அதுதானே. தன்னைக் கொல்லவரும் பசுவையே கொல்லலாம் என்றால் பல பேரைக் கொல்லவல்ல இந்த நாயைக் கொன்றது எவ்வளவு நல்லவிடயம் எனப் பெற்றோர் பேசிக்கொண்டனர்.

விசர் நாய் ஒன்று திரியும் செய்தி ஊரில் ஏற்கனவே பரவியிருந்ததனால் சிறிய பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்பாமல் இருந்த பெற்றோர் மகழ்ச்சியோடு அவர்களை ரியூசனுக்கு அனுப்பி வைத்தனர்.

''நல்ல வேலைதான், அது தேவையானது தான் என்றாலும் குழந்தைகளின் நெஞ்சில் கொலை உணர்வு தோன்றுமாறு அவர் மாணவர்களின் முன்னால் இவ்வாறு அந்த நாயை அடித்தது முற்று முழுதாகச் சரியென்று சொல்ல முடியாது." என ஒரு முதிர்ந்த ஆசிரியர் மாணவரிடையே கதைத்து விட்டார்.

சில மாணவர்கள் அன்றிரவு கனவில் அந்த ஆசிரியர் தங்களை அலவாங்கினால் அடிப்பதாக அலறினர். கனவு கண்ட ஒரு மாணவனின் தந்தை மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு முக்கி பணியாளர்.

நெருப்பு இல்லாமலே, ரியூசன் கொட்டிலில், மயிர் கொட்டிய மண்டையில் இருந்து வெளிவந்த ஒரு பொறி; காட்டுத்தீயானது.

நன்மை செய்த அந்த மாஸ்டருக்கு பிள்ளைகள் குறைந்து விட்டனர். ரியூசன் மாஸ்டர்களில் நீண்ட அனுபவம் உடைய அந்த மாஸ்டர் அக்கிராமத்திற்குச் செய்த சேவைக்குப் பதிலாக அந்தச் சமூகம் அவருக்குக் கொடுத்த மரியாதையினை அவர் மௌனமாக ஏற்றுக்கொண்டார்.

சில நாட்கள் அந்த மாஸ்ட்ர் அமைதியாக இருந்தார். நாயைப் போலவே குரைத்துக் குரைத்துச் செத்துப்போன தனது பால்ய நண்பனை

நினைத்தபடியே ஒரு மாலை நேரம் அவர் உலாத்திக்கொண்டிருந்தார்.

ஆறாம்வகுப்பு படிக்கும்போது அந்தச் சம்பவம் நடந்தது. மாஸ்டரின் நண்பனுக்கு நாய்க்குட்டி என்றால் கொள்ளை ஆசை, தூக்கி விளையாடுதல், ஓடிப்பிடித்து பந்து எறிந்து விளையாடுதல், நீந்துதல் என்று அவனுடைய அதிக நேரம் நாய்களோடு செலவழித்தான். ஒரு நாள் தாயாரைப் பயணம் அனுப்ப பஸ்நிலையத்திற்கு சென்றிருந்தான். இருள்பிரியும் காலை வேளை அங்கு வந்த சிறிய நாய் ஒன்று அவனுடைய கரண்டிக் காலைக் கௌவி விளையாடியது. அவனும் காலால் தட்டித் தடவி அதனோடு விளையாடினார்.

ஆனால் சிறிது காலத்தின் பின் அவனை வைத்தியத்திற்காக ஹொறிவிலைக்குக் கொண்டு சென்றும் பலன் பெரியதாகக் கிடைக்கவில்லை.

விதி: அவனை நாயாகவே குரைத்தபடி வாயால் நீர்வடிய, அவன் இறந்துபோனான்.

ஐந்து கிலோ தள்ளியிருந்த கல்வி நிறுவனம் ஒன்று அவரை அழைத்தது. வேறுவழியின்றி அவர் அங்கு செல்ல ஆயத்தமானார்.

கல்வி கடைச்சரக்கான போது அதில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக ரியூசன் சென்றர்கள் மாறிவிட்டன. பங்குச் சந்தை நிலமைதான்.

ஆசிரியர் பஸ் நிலையத்திலே நின்றபோது ஒருவர் தினசரிப்பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார்.

நாலைந்துபேர் அவரைச் சுற்றி நின்றனர். ஜோக் பகுதியை அவர் உரத்து வாசித்தார்.

நம் நாட்டில் சிங்கம் இல்லாத சிங்கராஜ வனமா? அரசியல் கட்சியொன்று புதிய பாராளுமன்றத்திலே கேள்வியெழுப்பியது.

தீர்மானம் விவாதத்திற்கு விடப்பட்டது. ஒரு வாக்கு வித்தியாசத்திலே சிங்கம் ஒன்றினை சிங்கராஜா வனத்திலே விடுவதாக பாராளுமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முறைப்படி விலை மனுக் கோரப்பட்டது. சிங்கப்பூர் சந்தையில் நிறுவனம் ஒன்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சிங்கம் இலங்கைக்கு அனுப்பப்பட இருந்த வேளையில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை

அச்சிங்கம் நடத்தியது.

''சிங்கத்தாரே சிங்கத்தாரே நீங்கள் இலங்கைக்குப்போனாலும் உங்களுக்கு ஆலோசகராகப் பணிபுரிய நரியாரைக் கொண்டு போகவில்லையா'' என ஒரு பத்திரிகையாளர் கேட்டார்.

கம்பீரமாகச் சிரித்த சிங்கம் ''இலங்கையிலே தரமான நரிகள் உள்ளன. மலிவாகவும் வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். சிங்கப்பூருக்கு வெளிநாட்டுக்குச் செலவாணியில் குறைவு ஏற்படாது'' என அது கூறியது.

மற்றொரு பத்திரிகையாளர் ''அங்கே பல இனமத நரிகள் உள்ளனவாமே'' என்றார். ''நான் சகல பாசையும் பேசும் தமிழ் நரி ஒன்றையே தேர்ந்தெடுப்பேன்'' எனக் கூறி நோ மோ குவஸ்சன்'' என்று கையசைத்து வாசல்க் கதவை அடைத்துக் கொண்டதாம்.

செய்தியைக் கேட்டவர்கள் விளங்கியும் விளங்காமலும் உரத்துச் சிரித்தனர்.

நமது ரீயூசன் மாஸ்டர் தனக்குத் தொல்லை கொடுத்த உள்ளூர். நரியைப் பற்றி யோசித்தார். அவரது அகன்ற நெற்றியில் நான்கைந்து சுருக்கங்கள் தோற்றின.

# உள்ளும் புறமும்

நல்ல வெம்பு மணலில் கால் புதைக்கக் குழந்தைகளும் அவர்களின் எண்பது வயதுத் தாத்தாவும் உலாவந்தனர்.

வெட்டித்தழைத்த நாவல் பற்றைகளில் குழந்தைகள் ஓடி ஓடிக் கனித்த நாவல் பழங்களை தேடித்திரிந்தனர்.

முருங்கை, கிளா, ஈச்சை, துவரை என வெவ்வேறு பற்றைகளிலும் பழங்களைக் காணும்போது தாத்தாவின் ஆலோசனையுடன் அவற்றையும் ருசி பார்த்தபடி மிகவும் சந்தோசமாகப் பொழுது போனது.

தாத்தாவால் வேகமாக நடக்க முடியவில்லை. என்றாலும் அவர் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. அவருடைய ஒரு கால் பொய்க் கால் ஆகும். குழந்தைகளின் கண்களில் தெரிந்த பிரகாசமே அவருக்கு போதுமானதாக இருந்தது.

பாடசாலைகளின் கோடை விடுமுறைக்கு அவர்கள் வந்திருந்தனர். அணில்களும், குருவிகளும் அந்தப் பற்றைக் காட்டில் ஓசை எழுப்பிய வண்ணம் இருந்தன. அது ஒரு சரணாலயம் என்னும் அளவிற்கு சிறு பற்றைகளின் நுனிகளில் வெள்ளைக்கொக்குகள் ஓய்வெடுத்துக் கொண்டன.

''தாத்தா தாத்தா நாங்கள் உங்களை கஸ்டப்படுத்துகிறோமா'' என ஒரு குழந்தை கேட்டது ''இல்லடா கண்ணு இது உன் அப்பாவை தூக்கிச் சுமந்த தோளடா உன்னைத் தூக்கிச் சுமப்பதில் நான் எவ்வளவு சந்தோசம். அடைகிறேன் என்பது எனக்குத்தான் தெரியும்.'' என்று தாத்தா கண்ணீர் கசியச் சொன்னார். தாத்தாவின் தோளில் இருந்தபடியே முன்னால் பாய்ந்து ஓடி ஒழித்த முயலின் பாய்ச்சலை ரசித்தான் அந்தப் பையன்.

''வெளிநாட்டில் கூட்டில் அடைத்த மிருகங்களைத்தான் காணலாம். அல்லது அந்த அந்த நாட்டுப்பிள்ளைக்குத்தான் இப்படியான அனுபவங்கள் வரும். அப்பா தொடர்ந்து வேலைக்குப் போவார். அம்மா பாட்டைம் ஜொப், நாங்க பள்ளிக்கூடம் ரி. வி. இப்படி ஒரே இயந்திரமயம்.

கண்ணாடிக்குப் பின்னால் நின்று கட்டிடங்களையும் வாகனங்களையும் பார்த்துப் பார்த்து மனம் கல்லுமாதிரித்தான் " என்று அவர்களின் மூத்த பிள்ளை கூறினாள்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்....."

அந்தக் காலத்துல அரிவரியில் படித்தது, சொல்லிப்பார்த்தார் தாத்தா. "ம்.... காலம் மாறிப்போச்சு மக்காள் எல்லாம் ஈசன் செயல்" என்றார் தாத்தா "அம்மா காவலுக்காகவும் பொழுது போக்குக்காகவும் கனடாவில் ஒரு நாய் வளர்த்தார், இலங்கைக்கு வரும்போது அது பெரிய பிரச்சினையாகப் போச்சு தாத்தா" என்றாள் பெரியவள்.

"நான் சொல்றன் அக்கா, அப்புறம் தாத்தா நாங்க எங்கட நாயோடுதான் சிறிலங்காவுக்கு வந்தமா? அதே பெரிய பிரச்சினையாச்சு" என்றாள் சின்னவள் தொடர்ந்தாள் பெரியவள் "இங்கு வந்து இறங்கினா! வே(b)ட்ஸ்புளுநோய் பரவாமல் இருக்க இலங்கைக்கு வரும் எல்லா மிருகங்களும் ஊசிமருந்து பாச்சணுமாம் என்று, அது வேறு பிரச்சினை. எல்லாம் முடிந்து இங்கே வரும் வழியில் வீதியில் போன தெரு நாய்களைப் பார்த்து அம்மாவின் நாய் திறந்திருந்த கார் கண்ணாடியினூடாகப் பாய்ந்துபோக; வீதியில் வந்த அடுத்த கார் அதை அடிச்சுப்போட, பெரிய கூத்தாப் போச்சு தாத்தா. அம்மா உழைத்த காசெல்லாம் நாயோடே போச்சு தாத்தா" என்று பெரியவள் முடித்தாள்.

"கனடாவில் தெருவில் நாயை அலைய விட்டா தண்டக் காசு கட்டவேண்டும். இங்கு எல்லா வீதிகளிலும் நாய்கள் தான். ஒரே தொல்லையாப் போச்சு தாத்தா" என்றாள் சின்னவள்.

"பொலிஸ் என்றி போடப்போனாப் பெரிய தொல்லை என்று பேசாமவிட்டா, அது இன்னொரு கூத்தாக மாறிப் போச்சு தாத்தா" என்றாள் பெரியவள். தாத்தாவுக்கு மீதிக்கதையும் கேட்க ஆசை ஆனால் குழந்தைகளுக்கு மூச்சு வாங்கியது. "இளனி குடிச்சித்து கதைப்பம் பிள்ளையாள்" என்று கூறிய தாத்தா நல்லசெவ்விளனியைப் பார்த்து பக்கத்து தோட்டத்தில் வாங்கிக் கொடுத்தார்,

"ம். இப்ப சொல்லுங்க" என்றார் தாத்தா. "அக்கா அம்மாவும் அப்பாவும் எங்க போயிட்டாங்க அக்கா" எனச் சின்னவள் கேட்டாள்.

''செத்துப்போன நம்மட றொபின் மாதிரி ஒரு நாய் தேடப்போயிருக்காங்க. கிடைக்குமோ, கிடைக்காதோ கொலிடேய்ஸ் முடிஞ்சும் நாங்க ஸ்கூல் போகமுடியுமோ தெரியாது தங்கச்சி" என்றாள் அக்கா. ''அது கிடக்கட்டும் தாத்தா உங்கட கால் உடைந்து போனதும் ஏதோ நாயால்தான் என்றார் அம்மா. உண்மையா தாத்தா?" எனச் சின்னவள் கேட்டாள்.

''நான் சிறியவனாக இருந்தபோது அது நடந்தது. புனாணைக்கு மேல் கரடி உரிச்சகல் குளம் பகுதியில் புதிதாக 1970களில் காடு வெட்டி வயல் செய்தோம். சுற்றிவரக்காடு. இப்ப இருக்கிறமாதிரி இரவு முழுவதும் வாகனம் ஓடாது. கலைவு இல்லாத படியால் யானைப்புழக்கம் அதிகம். யானையின் சத்தம் கேட்டால் போதும் காவலுக்கு இருந்த நாய் வேலியோரம் போய்நின்று அட்டகாசம் காட்டும். சில யானைகள் பெரிசா எடுக்காமல் போயிடும். சில யானைகள் வேலியோரத்தில் வந்து தும்பிக்கையால் துளாவிப் பார்க்கும். சில யானைகள் வேலியை உடைக்கும் நாங்களும் நெருப்புப் பந்தம் காட்டி அல்லது தகரத்தில் அடித்து வாணம் விட்டு விரட்டுவம். ஒரு நாள் துவக்கால் சூடு பட்டு தப்பிய யானை ஒன்று வேலியை உடைத்துக் கொண்டு வந்து விட்டது. அன்று பகல் முழுவதும் நாங்கள் எல்லோரும் மிகவும் கஸ்டப்பட்டு வேலை செய்ததால் மேல் நோவில் மரணப்படுக்கையில் படுத்து விட்டோம். காவல்நாய் நாங்கள் படுத்திருந்த வாடியினுள் புகுந்து மறுபுறத்தில் ஓடி விட்டது. நாயைத் துரத்தி வந்தயானை நாங்கள் படுத்திருந்த வாடியை தனது தலையில் தூக்கிக் கொண்டு நாயைத் துரத்திக் கொண்டு ஓடியது. எங்களை வெறும் மரக்கட்டை என நினைத்ததுபோல் ஏறி உளக்கிக் கொண்டு போனது. எங்கள் எல்லாருக்கும் காயம். ஆனால் ஒருவரும் சாகவில்லை. அந்த நாள்தான் என்னுயை கால் எலும்பு தூள் ஆகப் போனது... அந்த நேரம் உங்கட அப்பா கொஸ்டலில் நின்று படித்தான், ம்... அதெல்லாம் பழைய கதைகள். ''வெளிநாய் என்ன? உள்நாட்டு நாய் என்ன, முறைப்படி பழக்கி எடுக்காட்டா தொல்லைதான். வெயில் ஏறிப்போச்சு மக்காள் வாருங்க போவம். கறுத்துக்கிறுத்துப்போனா அதுவேறு ஆக்கின" என்று தாத்தாவும் பிள்ளைகளும் வீட்டுக்குச்சென்றனர்.

# வயதுக்கோளாறு

''மதன்! நீ மட்டும் நல்ல பிள்ளை என்ற பெயர் எடுக்கவா பார்க்கிறாய். நாம் எல்லோரும் நண்பர்கள் என்றால், நீயும் கொஞ்சம் எடுத்தால் தானே நாகரிகமாய் இருக்கும்'' என்றாள் சுமன்.

''சுமன்! நான் இப்ப உங்களை எல்லாம் விட்டுப் பிரிந்திருந்தால் தானே நீர் இப்படிச் சொல்லலேலும். நூறுபேரில் தொண்ணூற்றி ஒன்பது பேர் லிக்கர் எடுப்பவர்களாக இருக்கலாம். ஒருவனாவது எடுக்காமல் இருந்தால்தானே சரியான உண்மைகள் தேவையான நேரத்தில் தெரியவரும்.

அவ்வாறு மிஞ்சும் அந்த ஒருவரில் இருந்து இன்னுமொருவர் உருவானால் அதுதானே உண்மையான சந்தோசம். அப்படியும் இல்லாமல் அந்த ஒருவரையும் வளைத்துப் போடுவதால் நூறு வீதம் எதிர் விளைவல்லவா கிடைக்கும். அதை உலகம் தாங்குமா?'' மதன் மேலும் கூறிக்கொண்டே போனான்.

''நாம் தொடர்ந்தும் நண்பர்களாக இருப்பதென்றால் இனிமேல் யாரும் என்னை வற்புறுத்தக்கூடாது'' என மதன் சற்றுக்காரமாகவே கூறினான்.

''சில நொடி அமைதியின் பின் தொடர்ந்தான். நல்லா யோசித்துப்பார் சுமன் முதலாம் வகுப்பில் நாற்பத்தெட்டுப் பேர் வகுப்பில் நெருக்கி நெருக்கி வியர்க்க வியர்க்க கொப்பிகளைக் கிழித்து தோணிசெய்து ஓடையில் விட்டோம். ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சை எடுத்த களைப்பில் கொஞ்சநாள் படிப்பை நிறுத்தி விளையாடினோம். ஆனால் ஆறாம் வகுப்பில் சிலர் போய்விட்டனர். சிலர் வந்து சேர்ந்தனர். பிறகு ஜீ.சி.ஈ.ஓ.எல் எல்லோருமா எடுத்தோம். அந்த பிரிவுகளுக்கெல்லாம் லிக்கரா காரணம்'' என்று நிறுத்தினான்.

''இவ்வளவு நேரமும் நீ சொன்னதெல்லாம் சரி, பாம்பு தின்னும் ஊரில் நடுத்துண்டு நமக்கு என்று சொன்னதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் மதன்'' என்றான் சுமன்.

''இப்ப நான் நடுத்துண்டுதான் எடுக்கின்றேன்" என்று சொல்லி அங்கிருந்த மீன் பொரியலின் பெரிய துண்டை எடுத்தான் மதன்.

''எல்லாம் சரி சுமன், இப்ப நான் கேட்கிறதுல நியாயம் இருக்கா இல்லையா என்றுபாரு, இப்ப நாம் ஆறுபேர் இருக்கிறம் இதில் ஐந்து பேருக்கு மட்டும் கேள் பிரண்ட்ஸ் இருக்கு, ஏன் உனக்கு மட்டும் இல்லை. என்று ஒரு கேள்வியைக் கேட்டான் மதன்.

''அது... அது வந்து" என இழுத்தான் சுமன்...

''இப்போ, நீ செய்வதிலும் ஒரு நியாயம் இருக்கும் என்றுதானே நீ நினைக்கிறாய், இப்படித்தான் எல்லோரும் தாங்கள் சொல்லுவதும் செய்வதும்தான் சரி, மற்றவர்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை. அமெரிக்காவை மட்டும் எல்லோரும் திட்டுகிறார்கள். கேள்வி கேட்பவர்கள் யாருமே எவருக்கும் விட்டுக்கொடுக்க விரும்புவதில்லை.

ஏன் சுமன் தினமும் குடிப்பவர்கள் ஏனையவர்களையும் தங்களுடைய வலையில் வீழ்த்துவதில் கவனமாக இருக்கின்றனர். நாங்கள் மட்டுமா குடிக்கிறோம். இங்கு எல்லோரும்தானே குடிக்கிறோம். எனக் கூறி தங்களுடைய கட்சியை நிலைநாட்டுவதில் தினக்குடிகாரனே சிலந்தி வலை பின்னும்போது எவ்வாறு இவர்களால் அமெரிக்காவை குற்றம் சாட்டமுடியும்.

ஏன் நீ கூடப் பிரகாசிடம் நீ ஏன் இன்னும் லவ் பண்ணத் தொடங்கவில்லை என்பதற்காக விளக்கம் சொன்னாயே" என்றவனை இடை மறித்து" ''என்ன! என்ன! சொன்னான்" என சுமன் கேட்டான்.

''ஆத்திரப்படாத சுமன்'' லவ் பண்ணி யார் யாரோட கதைத்தாலும் கோவம் வரும். அடிக்கடி விசாரணையும் சிணுங்கலும், பெரிய அவஸ்த்தை. லவ் பண்ணாட்டா எல்லோரும் ஓடி வந்து கதைப்பார்கள் எந்தக் கவலையும் இல்லை. என்று அன்று நீ பிரகாசிடம் கூறியது எனக்கு நன்றாகவே கேட்டது" என்று கூறிய மதன் மேலும் ஏதும் கதைத்து விடுவானோ என்று ''போதும்டாசாமி" எனச் சுமன் வாலைச் சுருட்டிக்கொண்டான்.

கொண்டு வந்த போத்தல் முடியும் தறுவாயில் மீண்டும் சுமன் ''மதன் அப்போதைய கதை வேற இது வேற சீன், நம்மட காந்தி

அன்ரி ஏன் அங்கிள துரத்தி விட்டவ? அதில் ஏதும் நியாயம் இருக்குமோ'' எனக் கேட்க மதன் ஆத்திரத்தில்

''யாருடைய கதையை யாரிடம் கேட்பது என்பதற்கு ஒரு முறை இருக்கின்றது. நாம் யாருடைய காசில் படிக்கிறோம். அம்மா அப்பா, அல்லாட்டி வெளியில் மாடாய் உழைக்கும் சகோதரர்கள், அல்லது அரசாங்கம, இவற்றின் ஆதரவில்தான் படிக்கிறோம். அப்படி இருக்கும்போதே நாம் பொறுப்பில்லாமல் எப்படித்திரிகிறோம். நமக்கே இவ்வளவு திமிர் என்றால், அன்ரி அவவாகக் கஷ்டப்பட்டு உழைச்ச காசைக் கரைப்பதற்கு என்றே அவவுடைய பென்சன் காலத்திலே மட்டும் வந்து உறவு கொண்டாட வந்த அங்கிளை விட அவ நேசிக்கும் அந்த இரு நாய்களும் எவ்வளவோ மேல்.

அதுகளுக்கு பிடிச்ச மீன் வாங்கி வந்து மீன் முள்ளு தெரிந்து சோற்றோடு பிசைந்து அவற்றிக்கு தீத்திவிடுறா என்றால் அது பெரிய அதிசயம் ஒன்று இல்லை, ஏன் நேற்றைய சூரியன் எப் எம் இல். வெளிநாட்டில் ஒரு பெண் பல லட்சங்களை வங்கியில் கொள்ளை அடிச்சு தங்களுடைய பூனைக்கு வைத்தியம் பார்த்த செய்தியை நீ கேட்கலையா?

சுமன் இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கிற அதே நேரத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பைத்தியங்களாகவும் இருக்கின்றனர்.

பணம், பெண், பொன், நிலம், விளையாட்டு, கடவுள், கலை, ஆட்சி, அதிகாரம், கௌரவம் என ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான இலட்சியப் பைத்தியங்களாக உள்ளனர். அதில் நீயொரு பைத்தியம், நான் ஒரு பைத்தியம், அன்ரி ஒரு பைத்தியம் அவ்வளவுதான்'' என்றான் மதன்

''சரி சரி மேடைப்பேச்சு பேசிப் பழக்க எங்களையெல்லாம் கூட்டிவந்தமாதிரித் தான் எனக்குப் படுகிறது'' என்று கூறிய பிரகாஸ் 'லவ்சிப்' என வெறும் கிளாசைக் குடித்தான்.

எல்லோரும் எழுந்து சென்றாலும் மனங்களில் கோடுகள் கீறல்கள் பதிந்து விட்டன என்பது என்னவோ உண்மையாகப் போச்சு.

தினமும் கூடி வம்பழப்பது, முடிந்தால் காசு சேர்த்துக் குடிப்பது அவர்கள் வழக்கம். லவ் பற்றிக் கதைப்பதனால் மதன் தலைமையில் குழு இயங்கும். குடி என்றால் சுமன் தலைமை தாங்குவான்.

நியாயப்படுத்துவதில் எல்லோருமே வல்லவர்கள்.

சில நாட்களாகக் குடிக்கக் காசு கிடைக்கவில்லை. சுமனுடைய ஆலோசனைப்படி அன்ரியின் வீட்டை நோக்கி ஐவர் சென்றார் அன்ரி அவசரமாக வெளியில் போக ஆயத்தமாவதைக் கண்டு ஒளிந்து கொண்டனர்.

இரு நாய்களையும் மடக்கிக் கொண்டனர்.

செல் போனில் சிறு மிரட்டல் விட்டனர். அன்ரி பதறி அடித்துக்கொண்டு பயணத்தையும் பாதியில் நிறுத்தி விட்டு ஓடி வந்தார்.

அன்ரியை வரவேற்ற சுமன் குழு ''அன்ரி அன்ரி, உங்கட நாய்களைக் கடத்திக்கொண்டுபோகப் பார்த்தனர். நல்லவேளை நாங்கள் வந்துவிட்டோம்'' என்று கூறி பரிசாக ஐநூறு ரூபாய் பெற்றுக்கொண்டனர்.

அடுத்தநாள் அன்ரியிடம் வந்தவர்கள் ''அன்ரி அன்ரி உங்கட அந்த வீட்டில இருந்தவங்க போன வாரம் போய்விட்டாங்க தானே, புது ஆட்கள் வரும் வரைக்கும் நாங்கள் அதில நின்று சோதனைக்கு படிக்கிறம் அன்ரி, என்று அன்ரியின் சாறியை ஒரு ஆள், நாடியை ஒருஆள் என்று தொட்டுத் தொட்டு ஐஸ்வைத்து மடக்கி விட்டார்கள்.

மதனுக்கு இவை பிடிக்கவில்லைதான், என்றாலும் அவனுகள் ஐந்துபேர் அன்ரியை ஏமாற்ற இருப்பதை அவன் அன்ரியிடம் சொல்ல விரும்பியும் சொல்லவில்லை. அன்ரி, யாரையாவதும் நம்பிவிட்டால் அவரை ஒன்றும் செய்ய முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

இப்போது அன்ரியின் அடுத்த வீடு அமர்க்களப்பட்டது.

''இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்''

எனும் கவிஞரின் சினிமாப் பாடல்போல் சுமன் குழுவினரின் காலம் கழிந்தது.

பகலினில் அவர்கள் தூங்கும் அழகினைக் கண்ட அன்ரி பிளாஸ்க்கில் ரீ போட்டு அனுப்பி விடுவா.

இப்பொழுது நாய்களும் அன்ரியும் வெளியில் போக வேண்டி

வந்தால் சுமன் குழு வீட்டைக்காவல் காக்கும்.

அன்றியின் வீட்டில் எங்கு என்ன பொருள் இருக்கிறது எனும் விபரம் அன்றியை விட நாய்களுக்குத்தான் தெரியும்.

இதை அறிந்த சுமன் குழுவினர் விலை குறைந்த டுப்ளிக்கேற் பொருட்களை உரிய இடங்களில் வைத்துவிட்டு விலை உயர்ந்த பொருட்களை எடுத்துக்கொண்டு தங்களுடைய தேவையை நிறைவு செய்தனர்.

தங்களை ஏற்கனவே சுமன் கோஸ்டியினர் ஒரு முறை ஏமாற்றியதனை மறக்காமல் இருந்த அந்த இருநாய்களுக்கும் இப்பொழுது அன்ரிக்கு நிலமையினை விளங்க வைக்க முடிந்ததையிட்டு வலு சந்தோஷம். திட்டமிட்டபடி அன்ரியும் நாய்களும் அந்த வீட்டில் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த நேரம் அன்ரியின் வாய் வயிறெல்லாம் ஆத்திரத்தில் எரிந்தது. ஆத்திரத்தில்" பாவிகளே! என அலறிவிட்டார்.

ஐவரும் ஒரே நேரத்தில் வெளியில் வந்து தலைதெறிக்க ஓடினர். இருவரை ஒரு நாய் கடித்து குதறியது. அன்ரி விழ்ந்து கிடந்தார்.

செய்தி கேட்ட மதன் ஓடி வந்து அன்ரியைத் தூக்கிச் சென்றான். கடிபட்ட சுமனும், பிரகாசும் வைத்தியசாலையில் இருந்து திரும்பிவர நாளாகும் என மதன் அன்ரியிடம் கூறினான்.

அன்ரி இழந்து விட்ட ஒரு நாய்க்காக அழுதுகொண்டிருக்கிறார். கிணற்றைச் சுற்றி தப்பியோடிய மற்றவர்களை ஒரேயடியாகத் தாக்கிவிடலாம். என குறிவைத்து கிணற்றுக்கு மேலால் பாய்ந்த வேளையில் கம்பியில் தட்டுப்பட்டு தலை அடிபட்டு மயங்கிய நிலையில் கிணற்றில் விழுந்த அடுத்த நாய் அழுகிக்கொண்டிருந்தது....

# ஆட்டுக்காரன்

"காதா கதுவறையா காதுவெள்ளை
செம்மறையா கொக்கு நிறத்தானே
குருநாட்டுப்பித்னே ஐயர் கோவிப்பார்
அலகு திறவாதே நசீ"

மாரியம்மன் கோவில் பூசாரியார் ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்து நாய்க்கு கூறும் இந்த மந்திரத்தை கோயில் கணக்குப்பிள்ளையின் காதில் குசுகுசுத்தார். கோயில் தலைவர் அருகில் வருவதைக் கண்டதும் மரியாதை செலுத்தும் வகையில் பூசாரியை விட்டு சற்றுத் தள்ளி நின்றார் கணக்குப்பிள்ளை.

"நாளைக்கு கன்னிமார் தெரிவு செய்யும் சடங்கு, இன்றைக்கு அம்மனுக்கு சாத்தி அழகுபார்க்கும் அடுக்கிலதான் நாளைக்கு வேலைக்குச் சனங்களை வரவைக்கிற அளவிற்கு இன்று தெய்வம் ஆடுபவர் வாக்குத் திறந்து கட்டுச் சொல்லவேணும்" என்றார் தலைவர் பூசாரியார் அவரைப் பார்த்து கள்ளச்சிரிப்பொன்று சிரித்தார்.

அன்றைய உபயகாரர் கொண்டு வந்த பொருட்களையெல்லாம் பனையோலைப்பாயில் பரப்பிவைத்து வகைப்படுத்தத் தொடங்கினார் பூசாரியார். தலைவர், கணக்குப்பிள்ளை, ஆட்டுக்காரர், பூசாரியின் உதவியாளர் ஆகிய எல்லோரும் பூசாரியாருக்கு உதவி செய்தனர்.

தாய்க்கும்பம், பரிவாரக்கும்பம், விளையாட்டுக்கும்பம், அடுக்குச்சாத்தும் பட்டுச்சேலைகள், அபிசேகப் பொருட்கள், பூசைக்குரிய திரவியங்கள், நைய்வேத்தியங்கள் என வகைப்படுத்திக்கொண்டு போனார்கள்.

இடையில் வாயில் குதப்பிய வெற்றிலையில் புகையிலைச்சாறு உறைக்காததனால் வெளியில் சென்று ஒரு முறை துப்பிவிட்டு வந்தமர்ந்தார் பூசாரியார்.

பட்டுத்துணிக்கட்டினை எடுத்த பூசாரியார் அவற்றைப் பக்குவமாகப் பிரித்தார். அதில் சிவப்பு பட்டொன்றில் கரப்பான் பூச்சியினால்

அரிக்கப்பட்ட இடம் இரண்டு ரூபாய் நாணயக்குற்றியின் அளவில் வட்டவடிவமான துவாரமாக இருந்து. அதை உயர்த்திப்பிடித்தபோது பூசாரியின் கண்ணும் தலைவரின் கண்ணும் அந்த துவாரத்தின் வழியாகச் சந்தித்து:க்கொண்டன.

தூரத்தில் அன்றைய பூசைக்கான பிரதான பட்டு எடுக்கப்போவதற்காக மேளகாரர் தனது மேளத்திற்குரிய பட்டிகளை இறுக்கிக் கொண்டிருந்தார். நாதஸ்வரக்காரர் தனது சுருதியை பரீட்சித்துப் பார்க்கிறார்.

மாரியம்மன் உற்சவம் ஊருக்கெல்லாம் குளிர்ச்சியைத் தரும் என்னும் நம்பிக்கை உண்டு, இறுதிநாளில் குளிர்த்தி பாடி தீர்த்தம் ஆடி நீராகாரம் உண்டு மக்கள் கலைந்து செல்வது வழக்கம்.

பூசையில் கலந்து கொள்பவர்களும் அச்சடங்குகளை நடத்துபவர்களும் பிழைவிட்டால், மாரி ஊருக்கெல்லாம் முத்தெறிவாள் என்னும் ஐதிகமும் கிராமங்களில் உள்ளது.

பட்டு அரிக்கப்பட்டு இருந்ததை தலைவரும், பூசாரியும், கணக்குப்பிள்ளையும் மட்டும் கண்டிருந்தால் சமாளித்திருப்பார்கள். தெய்வம் ஆடுபவரும் கண்டதனால்தான் புதிய பட்டு உடனடியாகக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் எற்பட்டது.

பூசாரி தலைவரையும், தலைவர் கணக்குப்பிள்ளையையும் பார்த்தனர். அன்று வெள்ளிக்கிழமை கடைகள் எல்லாம் மூடப்பட்டு இருந்தன. முப்பது கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றால்தான் இரண்டு மணித்தியாலத்திற்கு பின்னாவது பட்டினைக் கொண்டுவர முடியும், மேளகாரர்கள் பிரதான பட்டெடுத்துவர ஆயத்தமாகிவிட்டனர். ''நான் பூசைக்கு முன் பட்டோடு வருகிறேன்'' எனக்கூறிக்கொண்டு கணக்குப்பிள்ளை எழுந்து சென்றார்.

கணக்குப்பிள்ளை நிச்சயமாக வரமாட்டார் என்று தலைவருக்குத் தெரியும், பெரிய பட்டு மேளதாளத்துடன் வந்து விட்டது. அபிசேகம் முடிந்து பெரிய பட்டும் சாத்தப்பட்டு விட்டது.

தெய்வம் ஆடுபவர் தலையில் தண்ணீர் வார்ப்பதற்கு முன் தலைவர் அவரை அழைத்தார், ஆட்டுக்காரர் அக்கறையோடு

தலைவருக்கு மரியாதை செலுத்தி அமைதியாக நின்றார்.

''கணக்காளர் வரநேரம் போகும் போல கிடக்கு, சனத்த மினக்கெடுத்த இயலாது, அம்மனுக்கு அபிசேகம் முடிந்தவுடன் பூசையை உடனடியாக வைக்க வேண்டும்.

அம்மனுக்கு செலவளிச்சா என்ன? உனக்கு தந்தா என்ன நீதானே அம்மனுக்கு ஆடப்போறா, நல்லாச் சொல்லாட்டி, நாளைக்கு சனம் வராட்டிக் கரச்சலாப் போகும். உனக்கு கனக்கச் சொல்லத் தேவையில்லை. இந்தாபிடி, நூறு ரூபாய். பட்டுத்துண்டு அந்த விலதான்'' என்று சொல்லி சுருட்டப்பட்டிருந்த நோட்டினை யாருக்கும் தெரியாமல் ஆட்டுக்காரனிடம் கொடுத்துவிட்டார்.

உடுக்கு அடிக்கிற சத்தம் கேட்டு நிம்மதி அடைந்த கணக்குப்பிள்ளையார் கோயிலுக்கு நாலு வீடு தள்ளி அவருடைய பெரியம்மாவின் வீட்டில் சாய்மனையில் படுத்தபடி காலாட்டிக்கொண்டிருந்தார்.

பூசாரியார் சொல்லிக்கொடுத்த அந்த மந்திரத்தை முணுமுணுத்துப் பார்த்தார் கணக்குப்பிள்ளை, முழுவதும் ஞாபகத்திற்கு வரும் முன், பெரியம்மா, வீட்டின் பின்புறமாக அலறுவதும் நாய் குரைப்பதும் கேட்டது.

ஓடிச்சென்றார் கணக்கர். அதற்குள் விரும்பிய படி பெரியம்மாவிற்கு நாய் கடித்துவிட்டது. நாயினுடைய வாயில் இருந்து பெரியம்மாவின் கையை இழுத்து எடுத்தார். நாய் ஒரு பக்கம், கணக்கர் ஒரு பக்கம், பெரியம்மா நடுவினில் இழுத்த காட்சி சகிக்க இயலாது, ஆத்திரத்திலும், அந்தரத்திலும் மந்திரத்தைச் சொல்லிப்பார்த்தார் கணக்கர்.

காதா கதுவறையா காதுவெள்ளை
செம்மறையா கொக்கு நிறத்தானே
....................... ............. .................
..................... அலகு திறவாதே......

என உரத்துச் சொல்லாமல் மௌனமாகக் கூறிப்பார்த்தார். அதற்குள் நன்றாகச் சப்பிவிட்ட திருப்தியில் ஓடாமல் கணக்கருக்கும் இலக்குப்

பார்ப்பது போல் நின்றது. அந்தநாய்.

பெரியம்மாவைக் தூக்கிக்கொண்டு வீதிக்கு ஓடினார். கணக்கர். கோயிலுக்கு வந்திருந்த ஓட்டோவில் வைத்தியசாலைக்கு அவர்கள் விரைந்தனர்.

அன்று நூறு ரூபாய் கிடைத்த சந்தோசத்தில் தெய்வம் நன்றாகத் தலை சுற்றி ஆடியது. அம்மன் சந்தோசமாக எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டது. அது மலையேறியவுடன் காவல் காரன் வெளிப்பட்டான்.

ஊர்காவல் பண்ணவேண்டும் என்று தெய்வம் கூறியதும் காத்திருந்த இளைஞர்கள் சந்தோசத்துடன் வீதிக்கு வந்தனர். வேம்பம் பத்திரத்தை உருவி எறிந்து ஹா.. ஹ.. எனக்கூறி கூய்... என நீண்ட கீர்ச்சிட்ட ஓசை எழுப்பி தெய்வம் பாய்ந்து பாய்ந்து வீதியில் வேகமாக ஆடிச்சென்றது.

தெய்வத்தின் முன்னால் சென்ற இளைஞர்கள் எதிரே வந்த ஓட்டோவை ஓரமாக நிறுத்தச் சொன்னபோது அதனுள் இருந்த கணக்குப்பிள்ளையை அவர்கள் கண்டு ஆத்திரப்பட்டு என்ன நடந்தது என்று கவலையுடன் கேட்டனர்.

''அதெல்லாம் விபரமாகப் பிறகு சொல்றன். ஊர் காவல் முடிந்து வாருங்கள்". என எல்லோரையும் அவர் அமைதிப்படுத்தினார்.

அவரை இரத்தம் தோய்ந்தபடி கண்ட ஆட்டுக்காரர் ''இரத்தவாடை வீசுது நரபலி கேட்குது சாமி" எனப்பாய்ந்து: வந்தார். அவர் கணக்கருக்குக் கட்டுச் சொல்வதற்கு முன்,

''குரு நாட்டுப் பித்தனே ஐயர் கோவிப்பார் அலகு திறவாதே நச்"

என உரத்துக் கத்தினார் கணக்குப்பிள்ளை. தெய்வம் ஆடுபவர் ''ஹா..ஹா..'' என இரைந்துவிட்டு ஓடிச் சென்றார். சனங்கள் யாவரும் கடந்து சென்ற பின் பெரியம்மாவின் வீடு நோக்கி ஓட்டோ சென்றது.

ஊர்காவல் முடிந்து வாழிபாடி முடிந்தவுடன், ஓட்டோ சாரதியின் மூலம் செய்தி கேட்ட பின்பு தான் கோயிலடியில் அமைதி நிலவியது. பெரியம்மாவின் வீட்டார் சடங்குகள் முடிந்த பின் வீட்டுக்கு வந்தபோது அதிர்ச்சி அடைந்தனர். அடுத்தநாள் நித்திரை விட்டெழுந்த

பெரியம்மாவிற்கும் கணக்குப்பிள்ளைக்கும் உண்மை தெரிய வந்த பின்னர்தான் நிம்மதி அடைந்தனர்.

பெரியம்மா, பெரியப்பாவிற்கு காலையில் குளிப்பதற்காக தண்ணீர் சுட வைப்பதற்காக அடி மட்டை உரிமட்டை ஆகியன எடுத்துவர வீட்டின் பின்னால் போய் வழக்கமான இடத்தில் கைவைத்த போதுதான் நாய் கடிக்கத் தொடங்கியது.

தங்களுடைய நாய் அதே இடத்தில் குட்டிபோட்டுப் படுத்திருந்தது பெரியம்மாவிற்குத் தெரியும் அதுவும் பெரியம்மாவை மட்டும்தான் கிட்ட வர அனுமதித்திருந்தது.

பெரியம்மாவின் பக்கத்து வீட்டிலும் ஒரு நாய் குட்டி போட்டு இருந்தது. அந்த வீட்டார் எதிர் காலத்தில் நாய்கள் தொல்லையைத் தவிர்ப்பதற்காகக் தாயிடம் இருந்த குட்டிகளை பிரித்துவிட்டனர்.

அந்த நாய் அந்தரத்தில் குட்டிகளைத் தேடித் தேடி பால் வேதனையோடு அலைந்து திரிந்திருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் பெரியம்மா, பெரியப்பாவோடு கோயிலுக்குப் போகும் அவர்களுடைய நாய் உடுக்குச் சத்தம் கேட்டதும் வெளியில் வந்திருக்கின்றது. குட்டிகளின் தொல்லையில் இருந்து சற்று ஓய்வெடுக்க விரும்பி வீதியில் உலாத்தியபடி கோயில் புதினங்களுக்கு காது கொடுத்துக் கொண்டிருந்திருக்கின்றது.

அந்த நேரம் பார்த்து பக்கத்து வீட்டு நாய் இரவல் குட்டிகள் என தெரிந்திருந்தும் பெரியம்மா வீட்டு நாய்க்குட்டிகளுக்கு பால் கொடுத்திருக்கின்றது. அந்த வேளையில்தான் பெரியம்மா அடுத்த வீட்டு நாயினைச் சந்தித்திருக்கின்றார்.

விசர்நாய் இல்லை என்பதால் மட்டும் ஓரளவு திருப்தி என்றாலும் நீண்டநாள் ஓய்வில் இருந்தால் மட்டுமே பெரியம்மா நல்லா வருவார். கன்னிமார் பூசையும் முடிந்துவிட்டது. அடுத்தநாள் காலை கும்பம் சொரிதலுடன் ஆண்டுச் சடங்கு முடியவுள்ளது.

எல்லோருமே அவசர அவசரமாக இயங்கினர் கணக்குப்பிள்ளை நேர்த்திக்கடன்களை கணக்கு வைத்துப் பாரம் எடுத்துக்கொண்டிருந்தார். ஊரெல்லாம் கூடி பள்ளயப் பூசைக்கான நைய்வேத்தியங்களை

தயாரித்துக்கொண்டிருந்தனர்.

கணக்குப்பிள்ளையின் காதுக்குள் தெய்வம் ஆடுபவர் குசு குசுத்தார் ''நேற்றைய உங்க மந்திரத்தில கட்டுப்பட்டு ஓடிப்போகல்ல. இன்டைக்குக் கதைப்பம் எண்டுதான் இருந்த நான், உங்கட தலையத்தான் இங்க காணல்ல, இரவு உரிச்சுக் கொண்டந்த ஆட்டுக்கிடாவிலே எங்கட பங்கு பத்திரமா இருக்குமென்று நம்புறன்'' என்றார்.

பூசாரியார் கணக்குப்பிள்ளைப் பார்த்து கள்ளச்சிரிப்பொன்று சிரித்தார். மெலிந்த பெரியம்மா இரத்தத்தில தோய்ந்து இருந்தது, தன்னுடைய வேட்டி சால்வையெல்லாம் இரத்தம் தோய்ந்திருந்தது, ஆகியவற்றைப் பார்க்க காவல்காரனுக்கு ஆடியவனுக்கு ஆட்டுக்கிடா உரிச்ச காட்சி தெரிந்திருக்குப் போல'' என்று கணக்குப்பிள்ளை நினைத்தார்.

பெரியம்மாவிற்கு நாய்க்கடி வேதனை, பக்கத்துவீட்டு நாய்க்கு பால் வேதனை, கணக்குப்பிள்ளைக்கு தலைவேதனை, நேத்திக்கடன் கணக்கெல்லாம் முடித்துவிட்டு அன்றிரவு பதினொரு மணியளவில் தெய்வமாடுபவர்களைப் பார்ப்பதற்கு கணக்கர் போனர். ஆட்டுக்காரன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

விடிந்தால் ஒழிவுச்சடங்கு முடிந்துவிடும். தெய்வமாடுபவரைத் திருப்திப்படுத்தாவிட்டால் காலையில் சடங்கு தொடங்காது போய்விடலாம். எதற்கும் முதலில் அவனுடைய விடயத்தைப் பார்த்து விட்டு பிற்பகலில் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லலாம் என நினைத்த கணக்கர் ஆட்டிறைச்சிக்கான வழியை ஆராய்ந்து கொண்டிருந்தார். கணக்கர் சற்று அயர்ந்த போது கனாக்கண்டார். கனவிலே தான் கட்டியிருந்த ஆட்டுக் கடாவிற்கு தலைவர் குழை போட்டுக்கொண்டிருந்தார்.

நேர்த்திக் கடனுக்கு வந்த ஆட்டுக் கடா ஒன்று அறுத்துக் கொண்டு ஓடி விட்டது. என்று கணக்குப் பிள்ளையின் கணக்குப் பதிவுகள் ஒரு வாரத்தின் பின்னர் கோயில் நிருவாக சபைக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

# மனம் வாக்குக் காயம்

பாடசாலை வீதியும், பாசிக்குடா வீதியில் உள்ள அந்த பிள்ளையார் கோவிலின் மேற்குப் புற வீதியும் சந்திக்கும் இடத்தில் கிடந்த குப்பை கூடலங்களை பாடசாலை மாணவர்கள் சிரமதானம் மூலம் அகற்ற முற்பட்டபோது அக் குப்பைக் குவியலில் இருந்து ஒரு சிறிய உருவம் தலையை உயர்த்திப் பார்க்க முயற்சித்தது. மிகமௌனமாக இறந்தது கொண்டிருந்த ஒரு நாய்க்குட்டியே அந்த சிறிய உருவம். அதன் வயிறு ஊதி இருந்தது. ஒரிரு ஈக்கள் அதைச் சுற்றி வட்டமிட்டன.

மாணவர்கள் கூட்டத்தில் அதிகமாக பெண்மாணவர்கள் நின்றமையால் அந்தநாய் குட்டியை மெதுவாக அப்புறுப்படுத்தி விட்டு குப்பைகளை அள்ளி எடுத்தனர்.

சற்று வேளைக்கெல்லாம் அந்த நாய்க்குட்டி கோயிலின் மேற்குப்புற மதில் சுவரில் தன்னைச் சாத்திக்கொள்வதும். காலடி எடுத்து வைப்பதும் விழுந்து எழுவதும் என நடைபயில முயன்று தவறும் குழந்தைபோன்று வடக்கு நோக்கி நகர முயற்சித்தது. அதனது வேகம் கணக்கைப் புலப்படுத்துவதாக இல்லை. இதனைப் புதினம் பார்த்துக்கொண்டிருந்த மாணவர்களும் சென்றுவிட்டனர்.

இறக்கும் பெரியவர்கள் மூச்சு இழுத்தபடியே நாட்கணக்காக அவஸ்த்தைப்படுவது வழக்கம். நீராகாரம் கூட உட் செல்லாத நிலையிலும் கண்விழித்த நிலையில் இழுத்தபடி இருப்பது கூட வழக்கம்.

சில வேளைகளில் பால் பருக்கிவிடுவதும் யார் யாரையெல்லாம் கொண்டு வந்து பால் பருக்கிவிட வேண்டுமோ அவர்களை அழைத்து பால் பருக்கவைப்பதும் உண்டு.

இவாறான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய மரணம் சடுதியாகவும் ஏற்படலாம். வாரக் கணக்கிலும் செல்லலாம். சிலர் தங்களுக்கு வேண்டியவர்களின் தரிசனம் கிடைக்கும் வரையில் பார்த்திருப்பார்கள். இன்னும் சிலருக்கு மண், பொன், நாணயக்குத்தி ஆகியவற்றை உரைத்துப்

பருக்கிவிட உயிர்போகும். சிலருக்கு பிரண்டி, விஸ்க்கி. இன்னும் சிலருக்கு கோரோசனை என ஆளுக்கு ஆள் வேறுபட்ட முறைகள் மரணத்திற்கான ஏற்பாடாக உள்ளன. மனிதக் குழந்தைகள் இவ்வாறாக மரணிக்கும் சந்தர்ப்பம் குறைவு.

எப்படியெனினும் மரணம் திடீரென வருவது இலாபம் என்றே சொல்லவேண்டும். எப்படிச் சொன்னாலும். மரணிப்பதற்கு உயிரினங்களுக்கு அவ்வளவு விருப்பம் இல்லை. தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் கூட நாட்டுத் தலைவர்களின் மன்னிப்புக்காக ஏங்குவது வழக்கம்.

மாணவர்கள் கிளறிய குப்பை மேட்டில் சில கோழிச் சேவல்களும் கிளறிக்கொண்டிருந்தன. பக்கத்தில் இருக்கிற வீதியோரத்தில் பறந்த ஈசல்களைப் பறந்து பறந்து காகங்கள் பிடிக்கும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. பக்கத்திலே நின்ற பனைகளில் விழுந்து கிடந்த புழுத்துப்போன பனம் பழங்களை சில பசுக்கள் சுவைத்துக்கொண்டிருந்தன. பனைகளுக்கு இடையில் நின்ற மஞ்சவண்ணா மரத்தில் இருந்த அணில்கள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு இருந்தன. ஓரிரு குயில்கள்கூட தூரத்தில் விட்டு விட்டுக் கூவும் ஓசை கேட்கின்றது. கோழிச்சேவல்களின் காலடிகளில் மைனாக்கள் சில பேசிக் கொண்டன.

மழைவிட்டிருந்தது, கல்குடா மெயின் வீதியில் பாசிக்குடா செல்லும் வாகனங்கள் விரைந்துகொண்டிருந்தன. ஒரு சுறுசுறுப்பான சூழல் சூரியனின் வருகையால் ஏற்பட்டிருந்தது. இரு நாள் கோடை மழை ஓய்ந்ததும் காலை பத்து மணியளவில் அந்த இடம் கலகலப்பாகவே காணப்பட்டதென்று சொல்லக்கூடியதாகவே இருந்தது. அத்தனைக்கும் மத்தியில் அந்த நாய்க்குட்டி நிருதி மூலைக்கு வந்தது. குந்தி இருந்து வாகனங்களைப் புதினம் பார்த்துக்கொண்டிருந்தது. அதே நேரம் பாசிக்குடாப் பக்கமிருந்து கோவில் பக்கமாக மேலாடை இல்லாத ஒரு வறியவர் மெதுவாக வந்து கொண்டிருந்தார்.

மதியம், ஒரு மணி இருக்கும். மூன்று அழகிய பஜரோக்கள் ஒன்றன்பின் ஒன்றாக கோயிலின் நிருதி மூலையில் பிறேக் அடித்து நின்றன. பனைகளின் கீழ் படுத்துக்கிடந்த பசுக்கள் எழுந்து நின்றன.

அணில்கள் கீச்சிட்டன. சேவல்கள் கழுத்தை நிமிர்த்தி ஒலி எழுப்பின காகங்கள் மரத்தில் இருந்து எழுந்து இரைந்து விட்டு புதினம் பார்த்தன.

மஞ்சவண்ணா மரத்தின் கீழ் படுத்திருந்த வயோதிபரின் நெஞ்சுக்கூடு அந்த வாகனங்களின் தொடர்ச்சியான பிறேக் ஒலியில் பல முறை பக்கவாட்டில் கூட அசைந்து மீண்டும் வழமைக்குத் திரும்பினாலும் ஊதுவதும் உப்புவதுமாகவும் ஓசை எழுப்புவதாகவும் இருந்தது. மெதுவாக உடலை இழுத்து மஞ்சவண்ணாவில் முதுகைச் சாத்தி அதன் இருபுறங்களிலும் கைகளை நீட்டி நிலத்தில் ஊன்றியபடி கால்களை எதிர்த்திசையில் நீட்டியபடி வாகனங்களைப் பார்க்கமுயன்றார் அந்த வயோதிபர்.

நடுவிலே நின்ற பஜறோவின் கீழே ஒரு மெல்லிய உருவம் நீண்டு கிடந்தது. அது குப்புற கிடக்கிறதா மல்லாந்து கிடக்கிறதா என அந்த வறியவர்க்கு விளங்கவில்லை.

அந்த வாகனத்தின் கீழ் இருந்து இரு கால்கள் - இளம் கதலி வாழைத்தண்டுகள் போல் பளிச்சென்று முதலில் வெளி வந்தன. மறைப்புக்காக மாத்திரம் சிறு சந்தனக் கலர் காற்சட்டைகள் மிக சிறிதொரு பிறவுண்க்கலர் ரீசேட் உடன்கூடிய உயரமான அந்தப் பெண் கைகளில் அந்த நாய்க்குட்டியை ஏந்தியபடி வெளியில் வந்தாள்.

ஏனைய பஜரோக்களில் இருந்தவர்கள் இறங்கி ஓடிவந்தனர். அந்தப் பெண்ணின் தந்தை அவசரமாக நடு பஜரோவின் பின்புற கதவைத்திறந்து ஒரு பெரிய பாத்திரத்தில் இருந்து கொஞ்சம் பிரியாணியை எடுத்தார்.

அடுத்த பஜரோவில் இருந்தவர்களில் ஒருவர் ஓடிக்கோலன் போத்தலைக்கொண்டு வந்து கைகளில் ஊற்றி மிக மெதுவாக அந்த நாய்க்குட்டியில் முதுகில் தடவினர். நாய்க்குட்டியை வைத்திருந்த நங்கை மெல்லியதாக ஒரு முத்தம் கூட அந்த நாய்க்குட்டிக்கு கொடுத்தாள்.

சேவ்வியற்றில் அப்பா பிரியாணியைப் பிடிக்க அந்தக் குட்டியின் வாயை பிரியாணியை நோக்கி அந்தப் பெண் கொண்டு சென்றாள். பக்கத்தில் நின்ற சிறு பெண் தனது தந்தையைப் பார்த்து ‘‘கௌ நைஸ்’’ என்று முழங்காலில் கைகளை ஊன்றியபடி புதினம் பார்த்தாள்.

நாய்க்குட்டியையும் உணவையும் பாதுகாப்பாக கோயில் மூலையில் வைத்து விட்டு எல்லோரும் சிறிது நேரம் வரை பார்த்துக்கொண்டிருந்தனர்.

எல்லோரையும் பார்த்து அந்த சிறிய பெண் கௌ நைய்ஸ், நரோ எஸ்கேப். வீ ஆ லக்கி."

என்று சொல்லியபடியே குனிந்து நாய்கட்குட்டியின் முதுகில் தட்டியபடியே ''ரேக் இற் டா'' என்றாள். பக்கத்தில் நின்ற அவர்களில் ஒருவர் ''கீ நீட்ஸ்-மில்க்'' என்றார். நாய்க்குட்டி அங்கிருந்த கோழிக்கறியின் மணத்தை மட்டும் ரசித்தது. பஞ்சடைந்த கண்ணோடு அந்தப் பெண்ணைப் பார்த்து நாக்கை மட்டும் நீட்டி கொட்டாவிவிட்டது. ''இற்ஸ் சோ பீயூட்டி, அக்செப்றிங் அஸ்'' எனக்கூறியபடி டடியின் கைகளைப் பிடித்தபடி பஜரோவில் ஏறியபடி ''பை பை'' கூறி நாய்க்குட்டிக்கு பிளையிங் கிஸ் கொடுத்தபடி கதவையடைக்க மூன்று வாகனங்களும் பறந்துசென்றன.

மஞ்சவிண்ணா மரத்தடியில் இருந்த அந்த மெலிந்த வறியவர் பிரியாணியின் மணத்தை ஒரு முறை சுவாசிக்க முயற்சி செய்தார். அதே மணம் முன் வீட்டு நாய்க்கும் எட்டி விட்டது. அது ஒரு திடகாத்திரமான சிங்கம்போல வளர்ந்த நாய் அதனுடைய உறுமலிலும் பாய்ச்சலிலும் மீண்டும் அணில்கள் கீச்சிட்டுக் கொள்ள சேவல்கள் ஒலி எழுப்பின.

பாய்ந்து வந்த அந்த நாய் பிரியாணியைச் சாப்பிட நினைத்துக் குனிந்தவேளை குட்டியின் மணம் அதன் மூக்கில் பட்டிருக்கவேண்டும். திடீரென பஜரோ பிறேக் அடித்து போன்று அந்த நாய் நின்றது, ஒரு முறை தலையை நிமிர்த்தி நோட்டம் விட்டது. இந்தக் காட்சியை காகங்களும் சேவல்களும் அணில்களும் உற்றுப்பார்த்தன.

நாய்க்குட்டி பிரியாணியை நக்கிப்பார்த்தும் விடுவதுமாக இருந்தது. அது சாப்பிடுகின்றது என நினைத்து அந்தப் பெரிய நாய் காவலுக்கு நின்றதோ தெரியாது. அமைதியாக நின்ற அந்த நாய் சில நேரத்தின் பின் அப்படியே வீட்டினுள் அமைதியாகச் சென்றது.

காகங்கள், கோழிகள்கூட அந்த நாய்க்குட்டியின் உணவில் பங்குபோட விரும்பவில்லை. நீண்ட நேரத்தின் பின் கிழக்கு மேற்காக

இருந்த கோவில் மதிலில் தன்னைச் சாய்த்தபடி மீண்டும் கிழக்கு நோக்கி அந்த நாய்க்குட்டி நகர்ந்தது. சந்தி மூலையில் கழிப்புக்கு வெட்டிய நீற்றுப் பூசனிபோல் அந்த பிரியாணி அப்படியே இருந்தது.

கோடை மழை என நினைக்கவேண்டாம். கிழக்கில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கத்தினால் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. வானொலி கடலுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் எனவும் எச்சரித்திருந்தது.

மீண்டும் மழை ஆரம்பித்தது, வீதிகள் வெறிச்சோடின மஞ்சவிண்ணா மரத்தடி மனிதனின் ஓசை ஏதும் இப்போது இல்லை இயற்கையான குளிருட்டியில் விறைத்துக்கிடந்தார்.

அனாமதேய ரெலிபோன் ஒன்று பொதுவான பூத்தில் இருந்து கிராம சேவகருக்கு செய்தியை கொடுத்தது. தேசத்திற்குரிய மரண அடக்கம் இடம்பெற்று கொடுப்பனவு வெளச்சர்களும் நிரப்பப்பட்டன.

கோயில் கழுவப்பட்டு உள்வீதி வெளிவீதிகள் எல்லாம் மந்திரிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன. விசேட பூசையின் பின் ஒரு பெரியவர் தான் பார்த்த அந்த நிருதி மூலைக்கதையினை நிருவாக சபையில் உள்ள இளைய தலைமுறையினரிடம் கூறிக்கொண்டிருந்தார். நல்ல காலம், கோழி எலும்பென்று நினைத்து அந்த பெரிய நாய் குட்டி நாயைக் கடிக்கல்ல" என்று கூறிக்கொண்டிருந்தபோது அங்கு நின்ற அந்த நாயின் சொந்தக்காரர் "அந்த நாய்க்கு கனநாளாக கண்பார்வை குறைந்து விட்டது" எனக்கூற எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

கண்களைவிடவும் நாய்களுக்கு மூக்கே பிரதானம் என இங்கு வாழும் மக்கள் அறிந்துகொள்ள இன்னும் எவ்வளவு காலம் எடுக்குமோ? என நினைத்து சற்று அமைதியாக இருந்த அந்தப் பெரியவர் பின்புறமாக ஒட்டியிருந்த மண்ணைத்தட்டிக்கொண்டு மெதுவாக நடந்துசெல்கின்றார்.

# நிம்மி

நிர்மலவாசன் கோயில் மாடுபோல், கொழுகொழுவென்றிருந்தான் அவனுடைய அழகிய பெயர் நண்பர்களின் நாக்குகளுக்கு ருசியாக இருக்கவில்லை.

அம்மா அவனை செல்லமாக நிர்மல் என்றே அழைப்பார். எதிரும் புதிருமாக செல்லமாகக் கதைக்கும் நேசறிவகுப்பில் அவனை கமால் என்று அழைப்பார்கள்.

ரீ.வி.யில் அவன் சிங்கள நாடகங்களையே ரசிப்பான். நிமால் என்று தன்னைக் கூப்பிடும்படி வீட்டாரைக் கேட்டான். அப்பா அதை மறுத்துவிட்டார்.

முதலாம் வகுப்பில் ரீச்சரிடம் தனது செல்லப்பெயர் நிமால் என்றே கூறினான். மாணவர்கள் கமால் என்றனர். நிர்மல் ஒப்பாரியே வைத்து விட்டான். நாளாக நாளாக அவனுடைய வகுப்புப் பெண்கள் அவனை நிம்மி என்று அழைத்தனர். நிர்மலவாசனுக்கு இப்போது நிம்மி என்னும் பெயர் மிகவும் பிடித்து விட்டது.

நிம்மிக்கு படிப்பு கொஞ்சம் கம்மிதான். ஆனால் அழகு வடியும் முகம். சிரிக்கும் போது குழிவிழும் கன்னங்கள். எப்போதும் அவனுடைய மனமும் முகமும் ஒன்றாகவே சிரிக்கும். நல்ல நிறம். 2003 இல் 5 ஆம் தரத்திற்கு வந்துவிட்டான் நிம்மி. ஒரு நாளைக்கு அவன் இல்லாவிட்டால் வகுப்பு களை கட்டாது எல்லோருக்கும் அவன் இல்லாத வகுப்பு என்னவோ போலிருக்கும். அவ்வளவு கலகலப்பு.

கோயில் மாட்டிற்கு கோபமே வராதாம். யார்தட்டினாலும் சும்மாவே நின்றபடி அழகாகக் கழுத்தை ஆட்டி அசைபோடுமாம் அது.

நிம்மிக்கு நாய்க்குட்டிகள் என்றால் நல்ல விருப்பம். நமது ஊர்களில் தெரு நாய்கள் ஏராளம், ஏராளம். கோடையில் விசர்நாய்க்கடி அதிகம். மாணவர்கள் நாய்க்கடிக்கு அடிக்கடி ஊசி ஏற்றிக்கொள்வர்.

அன்றொரு நாள் நிம்மியின் கோலத்தைக் கண்ட அம்மா

அலுத்தபடியே ''சீ....சீச்சீ.. இது என்னடா நிம்மி'' என்று தலையில் அடித்து கொண்டார். தூரத்தில் வசிப்பவர்கள் நிம்மியின் வீட்டுச்சந்தியில் கொட்டி விட்ட ஐந்தாறு நாய் குட்டிகளை அள்ளி அணைத்துக்கொண்டு அம்மாவைப் பார்த்துச் சிரித்தான். அழகு வடிந்தது. அவனைச்சுற்றி ஒளிவட்டம் வீசியது. அந்த நேரத்தில் அவனுடைய முகத்தைப் பார்த்தவர்களால் மட்டும் தான் அந்தநேரத்து அவனுடைய முகத்தின் அழகினை மீட்டுப் பார்த்து ரசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் எனத் துணிந்து கூறமுடியும்.

காலையில் அவ்வாறு இருந்த முகம் மாலையில் கறுத்து விட்டது. ஊதுகின்ற பலூன் உடையும்போது குழந்தையின் முகம் அதிர்ச்சியோடு வாடுவது போல் அவனுடைய முகம் அதிர்ச்சியோடு வாடியிருந்தது. நிம்மியின் அப்பா அத்தனை குட்டிகளையும் அள்ளிக் கொண்டுபோனது அவனுக்கு அறவே பிடிக்கவில்லை.

குணுக்குக் குணுக்காகத் தொங்கும் நிம்மியின் சுருண்ட முடியும் அவனுடைய சிரிக்கும் கன்னமும் குறும்புகளும் வகுப்பில் மட்டுமல்ல பாடசாலையிலும் ஊரிலும் எல்லோருக்கும் பிடிக்கும்.

சித்திரை பிறந்துவிட்டால் நிம்மியை வீட்டில்காணமுடியாது. கோயில்களில் கும்பம் வைத்தாலும், கொடியேறலும் திருவிழாவும் என்றாலும் அவனுடைய பொழுதெல்லாம் கோயில்களில்தான் கழியும். மாரி, பேச்சி, காளி, சிவன், பிள்ளையார், முருகன் என்று ஊரில் உள்ள எல்லாக் கோயில் திருவிழாக்களும் முடிந்த பின்னர்தான் வீட்டில் அவனைக் காணலாம்.

விறகு வெட்டச்சென்ற நிம்மியின் அப்பா மீண்டும் வீட்டுக்கு வரவில்லை. இருக்கிறாரா இல்லையா என்பது கூட மூடு மந்திரம் ஆகிவிட்டது.

அம்மா நிம்மிக்காகவே சவூதி சென்றாள். தெரிந்த ஊரிலேயே அவளால் பிழைக்கமுடியவில்லை. இவர்களால் வெளிநாட்டில் பிள்ளையார் சுழிகூடப்போடத் தெரியவில்லை. அதுக்கெல்லாம்...... ஒரு இதுவேணும் என்று ஊரில் கதைப்பார்கள்.

நிம்மியின் அம்மம்மா கால் நீட்டிப்போட்டு முற்றத்தில் இருந்தபடியே

சாமியிடம் சவுதியில் இருக்கும் தமது மகளைக் காப்பாத்தும் படி இரங்கி வேண்டிக்கொள்வான். அவளால் முடிந்தது. அவ்வளவுதான். அவனுடைய சாப்பாட்டையும் சுருட்டுப் புகைச் செலவையும் நிம்மிதான் பார்த்துக் கொண்டான். இந்த வருடம் பிள்ளையார் கோயில் கொடியேற்றத்திற்கு முதல் நாள் கோயில் கிராம சாந்தி செய்துகொண்டிருந்தனர். பொம்மை கட்டி உள்வீதி சுற்றி வெளிவீதிக்கு வந்தபோது அந்தப்பேய்க்காற்று வந்தது.

கோயிலில் நின்ற பெரியவர்கள் எல்லோரும் எழுபத்தெட்டாம் ஆண்டு அடித்த சூறாவளியினை நினைத்தபடி வீட்டுக்கு விரைந்தனர்.

இழுத்து வந்த பொம்மையினை வீதியில்விட்டபடி தலைப்பாகை பறக்கவேட்டி கழண்டுவிழ ஓடி மறைந்தான் அதைப் பாரமெடுத்த இளைஞன்.

நிம்மிதான் அவற்றைப் பொறுக்கி எடுத்து குருக்களிடம் கொடுத்தான். அவைகளை மேலும் மந்திரித்து மஞ்சள் நீராட்டி நிம்மியிடம் குருக்கள் கொடுத்தார். மீதி வேலைகள் எல்லாவற்றையும் நிம்மியும் அவனுடைய நண்பர்களும் குருக்களோடு சேர்ந்து முடித்தனர்.

சில நாய்களுடன் கோயில் காவலாளியும் நிம்மியும் கோயில் வாசலில் எஞ்சி இருந்தனர்.

அன்றைய பூசைக்குரிய படையல்கள் தொடுவாரற்றுக்கிடந்தன. நிம்மியும் நண்பர்கள் சிலரும் எஞ்சிய நாய்களும் சாப்பிட்டு எவ்வளவோ பண்டங்கள் எஞ்சி இருந்தன. அதே காற்று மீண்டும் விடியற் காலை மூன்று மணிக்கு வந்தது. மின்னல் வெட்டியது. மழை தூறியது. திருவிழாவுக்காக புளி போட்டு பூசி மினுக்கியகொடி மரம் அடிமின்னலில் பளிச்சிட்டது.

கொடி மரத்தில் உச்சியில் இருந்த சிறு மணிகளில் கலகலத்த ஓசை, ஒரு நாளும் இல்லாதவாறு காவலாளிக்கு நடுக்கத்தைக் கொடுத்தது.

குளிர் அடித்தது. கோயில் வாசலில் மணலைக்கிண்டி விட்டபடி சுருண்டு படுத்த நிம்மி அருகில் படுத்த நாயின் சூட்டில் மீண்டும் நித்திரையானான்.

இறைவனைத் தனியே விட்டு விட்டு ஊரார் சென்றாலும் நிம்மியும் சில சிறார்களும் சில நாய்களும் பிள்ளையாரைக் காப்பாற்றினர் என்றே சொல்லவேண்டும்.

விடிந்த பின்னர்தான் காற்றின் அட்டகாசம் தெரிந்தது. வாழை, மா, பலா, தென்னை என்பன முழுதாகவும் பாதியாகவும் தெறித்திருந்தன. சில வீடுகளில் கூரைகள் இல்லை.

நித்திரையில் வீட்டினுள் ஊஞ்சலில் இருந்தபடியே ஒரு மாதக்குழந்தையினை மார்பில் அணைத்த படி பாலூட்டிய குழந்தையொன்றின் தலையினைக் தடவிச்சென்ற கூரையின் பருத்த கைமரம் ஒன்று அன்றைய செய்தியின் முக்கிய செய்தியாக அடிபட்டது. ஊரெல்லாம் அது பெரிய கதை.

ஐயோ எவ்வளவு மாங்காய் எவ்வளவு தேங்காய் என்று வாயைப் பிளந்தபடி நிம்மி ஆற்றங்கரைக்குப் போய்க்கொண்டிருந்தான். கூடவே குட்டி நாய் ஒன்றும் கோயில் முற்றத்தில் இருந்தே அவனைத் தொடர்ந்தது. நமது கிராமங்களில் பிரியாணியென்பது பெரியவிடயம். ஆனால் கிராமத்து நாய்களுக்கு பிரியாணிபோல் சுவையான உணவு இன்றும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது.

"நாயைக் கழுவி நடுவீட்டில்.............."

முதல்நாள் இரவு நிறையவே நெய்வேத்தியங்களை உண்டதனால் நிம்மி காலையில் வேகமாக நடக்கவேண்டி இருந்தது.

அண்மைக்கால நிகழ்வுகள் ஆற்றங்கரைகளை அடியோடு அழித்து விட்டன. மறையக்கூடப் பற்றைச் செடிகள் அங்கு இல்லை.

ஆற்றைக் கடக்கபெரிய வள்ளம் (பாதை) ஒன்றைக் அக்கி ராமத்தில் புதிதாகக் செய்து இருந்தனர். அது ஒரு பஸ்சினை ஏற்றிச் செல்லக்கூடிய அகலமான பாதை, அதன் அடிப்பக்கத்தில் ஒட்டுவேலை சரியாக இல்லாததனால் ஊரெல்லாம் கூடி அப்பாதையினை கத்திப் பாட்டில் நிறுத்தி இருந்தனர். நல்ல மறைவு. நிம்மிக்கு நிம்மதி. சொர்க்கத்தைக் கண்டசுகம்.

ஆதாரத்திற்காக அவனுடைய கைகள் பாதைக்கு வைத்திருந்த முட்டுக்கட்டையில் பதித்திருந்தது. நாய்க்குட்டி நிம்மதியாக நிம்மிக்குப்

பின்னால் காலை உணவை அனுபவித்தது.

ஆற்றங்கரைக்குச் செல்வதற்காக முட்டுக்கட்டையில் சற்று அழுத்தத்தை அதிகரித்தான் நிம்மி. பாதை எதிர்பாராமல் பக்கவாட்டில் சரிந்தது. பள்ளத்தில் இருந்த பாதையினை ஆற்றுக்கு எடுத்துச் செல்ல. உபயோகித்த இரு நெடிய தண்டவாளங்களும் அடுத்த பக்கத்தில் கிடந்தன. அவை இந்தப் பக்கத்தில் இருந்திருந்தால் நிம்மியும் குட்டியும் விரைவாக சேற்றில் புதைந்திருக்க மாட்டார்கள். இறந்துபோகும் வரைக்கும் நாய் அனுங்கிக்கொண்டே இருந்தது.

காற்றையும் மழையையும் பற்றியே மக்கள் கதை அளந்தனர். நிவாரணத்திற்காக அவர்கள் அலைந்தனர்.

பாதை சரிந்ததைப் பற்றி அவ்வூர் இளைஞர்கள் கவலைப்பட்டனர். மீண்டும் அதனைச் சரிசெய்து முட்டு வைக்க தங்கள் முதுகுப் பலத்தை உபயோகிக்க வந்தால் எவ்வாறு ஓடி ஒழிப்பது என்பதைப் பற்றிக் கதைத்து அவர்கள் ஜோக் அடித்தனர். நாய்க்குட்டியின்அலறலைக் கேட்ட சிலரும் எத்தனையோ உயிர்கள் போய்விட்ட இந்தவேளையில் நாய்க்குட்டி என்ன பெரிய கொம்பா என விசில் அடித்தனர்.

அம்மம்மாவிற்கு நிம்மியைப் பற்றி கவலை இல்லை. திருவிழா முடிந்ததும் நிம்மி வருவான் என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள்.

பாதையில் பக்கச்சரிவின் கீழிருந்து சிறிது சிறிதாக வாடை வீசியது. நாய்க்குட்டியைப் பற்றி கதை பரவியதனால் யாரும் கவலைப்படவில்லை. நல்ல வேளை நாய்க்குட்டியோடு போய் விட்டது ''சிலவேளை வெள்ளோட்டத்திற்கு முன் நமது குழந்தைகளை இந்தப் பாதை பலி யெடுத்திருந்தால் நாம் என்ன செய்வது, இனிப்பயமில்லை'' எனச்சிலர் கதைத்தனர்.

கோயில் கொடி இறங்கியது. மீண்டும் மக்கள் அன்றாட வாழ்வில் கவனம் செலுத்தினர். பாதை மீண்டும் ஊராரின் ஓசையோடு கிளம்பி வருகின்றது. முட்டுக்கட்டையில் இறுகப்பற்றிய எலும்புக்கூடு சேர்ந்து வருகிறது. பத்து விரல்களினதும் பூட்டுக்கள் விலகவில்லை: அழுகிய சிறிய எலும்புக் கூடொன்று கூடவே பார்வைக்கு பாதையோடு கிளம்பி வருகிறது.

# பதினாறும் பெற்று..

தமிழாசிரியர் சங்கத்தின் கோரிக்கையினை ஆதரித்து அன்று ஆசிரியர்கள் யாவரும் சுகவீன லீவில் இருந்தனர். பாடசாலை அமைதியாக இருந்தது. மூன்று மாடிக் கட்டிடத்தின் கல் நாட்டும் விழாவிற்கான நடவடிக்கைகள் ஆடம்பரம் எதுவும் இல்லாமல் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

அது ஒரு டி.எஸ்.டி பாடசாலையாகும். நீண்ட நாட்களாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினை அரித்து எடுத்த பிரச்சனை ஒருவாறாக சங்கத்தின் முயற்சியால் முடிவுக்கு வந்துவிட்டது.

அதிகமான வேலையாட்களைக்கொண்டு ஒரே நேரத்தில் வேலைக்கு அமர்த்தி தொடர்ந்து வேலை செய்தால் குறித்த காலத்தில் கட்டிடத்தை முடித்து விடலாம். என பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் அதிபருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

குருக்கள் ஐயா மந்திரம் ஓத, கல்விப் பணிப்பாளர் அழகாக தேவாரம் பாட, முன்னாள் அதிபர் அடிக்கல் நாட்டி வைத்தார்.

மேசன்மார் கத்தா மரத்தின் கீழ் கதைத்துக்கொண்டிருந்தனர். அவர்களது காலடியில் சிதறிய பொங்கல் பருக்கைகளை அங்கிருந்த கறுப்பு நாய்க்குட்டி உண்டு மகிழ்ந்தது.

கட்டிடம் வேகமாக வளர்ந்தது. வேலையாட்களின் மீதி உணவைத் தொடர்ச்சியாக உண்டு வளர்ந்ததால் எல்லோரையும் கவரக்கூடிய வகையிலேயே அந்தக் கறுப்பு நாய் வளர்ந்து வந்தது.

கறுப்பி என அதை எல்லோரும் அழைத்தனர். மிக விரைவாகவே கறுப்பி தாயாகி விட்டாள்.

வளர்த்த நாய்குட்டி போட்டாலே பெட்டைக் குட்டிகளை வீதிச் சந்தியில் அல்லவா கொட்டுவார்கள்.

"பெட்டை நாய்கள் நல்ல காவல்" என்ற மேசன்மாரும் ஒப்பந்தக் காரரும் நினைத்ததன் விளைவால் தாய், மகள், மகள் என்று மூன்று கறுப்பிகளை முன்றாம் மாடி முடியும் வேளையில் மேசன்மார்

விட்டுச் சென்றனர்.

2002 ஆம் வருடம் டிசம்பரில் பேயாய் பெருமழை தொடர்ச்சியாக பொழிந்துதள்ளியது. வெள்ள நிவாரணம் பற்றியும் மின்னலில் இருந்து எவ்வாறு தப்புவது என்பது பற்றியும் வானொலிகள் தொடர்ச்சியாக அறிவித்துக்கொண்டிருந்தன.

க.பொ.த.(சா/த) பரீட்சையும் முடிவடைந்துவிட்டது. மழை விட்டபாடு இல்லை. அதிபரையும் ஓரிரு சகாக்களையும் தவிர பாடசாலை வளவினுள் எவரையும் காணமுடியவில்லை.

கொள்ளை அழகாகத் தூக்கிக்கொஞ்சி மகிழும் விதத்தில் வெள்ளையும் கறுப்புமாக 16 குட்டிகளை 3 கறுப்பிகளும் ஒன்றாய் பிரசவித்தன.

பாடசாலை வளவு வெள்ளத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. 3 நாய்களும் குட்டிகளை கவ்விக் கவ்வி இடம் மாற்றின. கண் விழிக்காத நிலையிலும் ஆண்குட்டிகள் தாய்மார்களை உறுஞ்சித் தள்ளின.

ஒரு மாதமாக பெய்த மழை ஒரு நாள் மட்டும் ஓய்ந்தது ஆண் குட்டிகள் முதலில் கண் விழித்தன. ஒன்றன் பின் ஒன்றாக அவைகள் மெயின் வீதியை எட்டிப் பார்த்தன. நீண்ட நாள் உணவில்லாமல் இருந்த அப்பிரதேச பிச்சைக்காரர் ஒருவர் ஈசலைப் பிடித்து இனிமையாக உண்ணும் தவளை போன்று அங்கு வந்த எட்டு ஆண் குட்டிகளையும் விற்பனைக்காக எடுத்துப் போய்விட்டனர்.

பாடசாலையினுள்ளே ஓடைகள் நிரம்பி வழிந்தன. ஓடையில் விளையாடக்கூட மாணவர் இல்லை. நீண்ட மழைக்கு தாக்குப் பிடிக்காமல் 3 கறுப்பிகளும் சுருண்டு படுத்தன. வரண்ட மடிகளில் அந்த ஆண்குட்டிகள் பால் குடித்தபோது கிடைத்த சுகம் இல்லையே என்ற ஏக்கம் மறுபுறம்.

பெட்டைக் குட்டிகள் கண் விழித்தன. 3 கறுப்பிகளினதும் பால்மடிகள் சுருங்கின.

வேறுவழியில்லாமல் பெட்டைக் குட்டிகள் இரை தேடத் தொடங்கின. நிரம்பி வழிந்த ஓடைகள் இரண்டு குட்டிகளை அள்ளிச் சென்றுவிட்டன. அவை ஆற்றிலே உள்ள ஏனைய உயிர்களுக்கு

உணவாக இருக்கலாம். யார் அறிவார்?

எஞ்சியவை ஆறுதல் இல்லாமல் அலைந்தன. சற்று வளர்ந்தன. உணவு கொடுக்க யாரும் இல்லை. பாலூட்டத் தாய் இல்லை. மழை விட்டு தலை தெறிக்கும் வெயில் எறித்தது.

வீதியோரத்திலே பெரியதொரு வாகனம் அமைதியாக நின்றது. அதன் 4 சில்லுகளின் நிழல்களிலும் இந்த சிறுசுகள் நிழலுக்கு ஒதுங்கின நாக்கை நீட்டி கொட்டாவி விட்டபடி நித்திரை செய்தன. என்ன நினைத்ததோ இரு குட்டிகள் எழுந்து வெளியில் சென்றன.

அது ஒரு வெள்ளிக்கிழமை ஆறுதலாகக் தூபதீபம் காட்டிய முதலாளி ஈஸ்வரா என்று ஸ்ரியறிங்கை வளைத்துத் தொட்டுக் கும்பிட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

காற்று அடித்த 4 சில்லுகளும் ஆரவாரம் எதுவும் இல்லாமல் அவற்றின் கீழே உறங்கிய அந்த சிறுசுகளின் காற்றை அகற்றிவிட்டன.

''அன்பே சிவம்'' எனும் தமிழ் சினிமாவில் கமலகாசன் காட்டிய கலை வண்ணம் போல் 4 காட்சிகள் வீதியில் காணப்பட்டது. அதைப் பார்த்து கரைவதற்குக்கூட காகங்கள் இல்லை.

இந்தக் குரூரத்தைத் தாங்க முடியாமல் இயற்கை கொடூரமாக சீறியது. வீதியில் வந்த வெள்ளம் 4 வண்ணத் தட்டுக்களையும் சகோதரிகள் போன வழியிலே ஒடையில் சேர்ந்தது.

யாரும் அறியாத வகையில் அந்த ஆறு உயிர்களும் ஆற்றுக்குப் போயின. எஞ்சிய இரண்டும் யாருமே கண்டு கொள்ளாதபடி அலைந்தன. வெள்ளத்தில் நனைந்த அதிபரின் நீளக்காற்சட்டையில் கரைந்த கீழ்ப் பகுதியில் அந்த இரு குட்டிகளும் சூப்பி சுவைத்தன.

வியர்வையும் ஊத்தையும் அவற்றுக்கு வித்தை காட்டினவோ? அதிபரின் கண்கள் சற்று கசிவைக் காட்டின.

மறுநாள் விடிந்தது. மூன்று மாடியில் முன்னால் உள்ள சுற்று மதிலின் கதவு பூட்டப்பட்டிருந்தது. அதற்கு முன்னால் இருந்த கிறவல் வீதியில் ஒரு நாய் குட்டி கால்களைச் சற்று உயர்த்தியபடி சரிந்து கிடந்தது. மூன்று மாடியின் விறாந்தையில் நின்றபடி அதிபர் அதைப் பார்த்து பெருமூச்சுவிட்டார்.

பெட்டைக் குட்டிகளை தட்டிக் கழிப்பது சமூகத்தின் வழக்கம். பெட்டைக் குட்டிகளை தட்டிக் கழிக்கும் சமூகம் அவை இறந்தாலும் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை.

நீண்ட மழையினால் உண்டாகிய புதிய நீர்த் தேக்கங்களில் நுளம்புக் குடம்பிகளும் வால்ப் பேத்தைகளும் எஞ்சிய அந்தக் குட்டிகளுக்கு நீரோடு உணவாகியிருந்ததால் தான் சற்று உயிர் வாழ்ந்து இருந்தன.

கரைந்த காற்ச்சட்டையில் உப்புக் கரைசல். அதில் ஒரு குட்டிக்கு பேதிக்கு கொடுத்த மருந்து போல ஆகிவிட்டதோ?

மண்வெட்டி எடுத்துப் புதைக்கவும் மாணவர்கள் இல்லை. நீண்ட மழை வீதிக்கரையில் மணலைக்கூட வைத்திருக்கவில்லை. காலை 10மணிக்குத்தான் மழை விட்டது. முன்வீட்டுத் தாத்தாவும் 3 வயதுப் பேரனும் பற்பேசையோடு வெளியில் வந்தனர். குழந்தை கண்களை அகலத் திறந்தான்.

''தம்பி தொடாதமனே. தொடாத, தொடாத'' என்றார் தாத்தா. பரிதாபமாக நின்றான் பையன். முதல் நாள் பார்த்த ஆங்கிலப் படத்தில் ஒரு நாய் ஒரு இராணுவத்தையே தலைமை தாங்கிச் சென்றதை ரீ.வீக்கு முன் ரசித்துப் பார்த்ததை நினைத்துப் பார்த்தான் அவன்.

தாத்தா அழைத்தும் அவன் அவரோடு செல்லவில்லை. வெள்ளத்திலே மிதந்து வந்து வீதியோரத்தின் வேலிக் கட்டையில் தொங்கி நின்ற செடியை எடுத்து நாய்க்குட்டிக்கு கொசு விரட்டினான்.

இழகிய நிலத்தில் மண்வெட்டியால் கொத்தும் முன்பே நீர் கசிந்தது. ஒருவாறு மண்ணை குவித்து பக்கத்தில் இருந்த கருங் கல்லையும் புரட்டி எடுத்து புதை குழியின் மேல் வைத்தார் தாத்தா, பேரன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

அன்று மழை விட்டிருந்தது. மக்கள் நிம்மதியாகக் தூங்கினர் என்ன பந்தமோ தெரியவில்லை, தாய் நாய் ஒன்று ஊளையிட பலமில்லாமல் புதைகுழிக் கல்லைச் சுற்றி வந்தது. பசி, பத்தும் பறந்து போகும் பசி. முயற்சியில் வெற்றி பெற்றது அந்த நாய். சுடலைப் பிசாசு போல் அந்த குட்டியின் உடலை அது உண்டது. தான் பெற்ற உடல்

தனக்கே சொந்தம் என அந்த தாய் நாய் நினைத்திருக்கலாம்.

பொழுது புலர்ந்தது சிறிய தென்றல் பாடசாலை வளவில் பறந்து தவழ்ந்தது. அந்தக் காற்றிலே தோண்டிய புதை குழியிலிருந்த நாற்றம் கலந்து வந்தது.

பற்பசையோடு மறுநாளும் அப்பையன் அங்கு வந்தான். புதைகுழியை வெறித்துப் பார்த்தான். அவனுடைய மனதிலே என்ன நினைத்தானோ? சில நினைவுகள் அந்த பிஞ்சு மூளையின் சில நரம்புகள் புடைக்கச் செய்தன.

அன்றிட வளவுக்குள்ள அப்புச்சி நட்ட வெண்டி விதைகளை அவருக்குத் தெரியாமல் தோண்டி எடுத்து வேறு இடத்தில் தான் நட்டுப் பார்த்ததையும் அவை முளைத்ததையும், வளர்ந்ததையும் அவன் நினைத்துப் பார்த்துச் சிரித்தான்.

அவனுடைய மூளையில், நாய்க்குட்டியைப் பற்றி ஒரு தெளிவு பிறந்தது. ''இதுதான் செத்துப்போனா மேல போற என்று தாத்தா கதைத்த விடயமோ'' என்று அவன் நினைத்தான்

என்ன அதிசயம் அதே அளவு கறுப்பு வெள்ளை நாய்க்குட்டி அவனுடைய காலை நக்கியது. மிகுந்த சந்தோசத்தில் பற்பசையை நீட்டினான்.

அதே நாய்க்குட்டி மீண்டும் உயிர் பெற்று வந்ததை நினைத்து தாத்தாவைப் போலவே அவனும் செயற்பட்டான். அந்தக் குட்டியை ஆன மட்டும் அடித்தான். சிறிய கைகளால் மண்ணைக் குவித்து புதை குழியை மூடிவிட்டான். மறுநாள் விடிந்தது. புதைகுழியோரம் பையன் குந்தியிருக்கிறான். குட்டி வருமா? மணம் வருமா? அடுத்த நாய்வருமோ?

# புள்ளியும் செல்லமும்

யுத்த நிறுத்தம் நீடித்துக் கொண்டிருந்தது, இக்கால கட்டத்தில் பதிய பாராளுமன்றம் கூட ஆட்சிக்கு வந்துவிட்டது.

''இந்தக் காலத்திலாவது இடைக்கால அரசு கிடைக்க வேணும் இறைவா, எமது குழந்தைகள் இனிமேலாவது சந்தோசமாக வாழவேண்டும்'' என ஒரு தாய் தனது அடிவயிற்றில் நான்கு முறை தட்டி ஆகாயத்தை நோக்கி தனது இரு கைகளையும் நீட்டியவாறு தனது குடிலுக்குள் இடுப்பு உடைந்து கிடக்கும் கணவனைக் கடந்து சென்று குடிலின் ஓலை இடுக்கில் மேற்குப் புறமாக மூடிக்கட்டிய செத்தையில் ஈர்க்குகளின் உதவியோடு தொங்கிக் கொண்டிருந்த வெளுத்துப்போன தனது நான்கு ஆண் மக்களதும் போட்டோக்களையும் தொட்டுக் கும்பிட்டாள்.

அந்த அழகிய நான்கு ஆத்மாக்களும் போன பின்பு எஞ்சிய கணவனைக் கூட இரக்கம் பார்க்காத விபத்து இடுப்பை உடைக்க வேண்டுமா என்ன? உயிர் இருக்கும் வரைக்கும் அவரைக் காப்பாற்றுவதிலாவது அந்த நான்கு ஜீவன்களுக்கும் நன்றிசொல்வது போல் ஒரு ஆறுதல் கிடைக்கும் என அத்தாய் நம்பினாள்.

கதிர் பொறுக்கி, உப்பட்டி சுத்தி, மாவிடித்து, கூனிவடித்து, பொன்னாங்காணி விற்று, விறகு வெட்டி இரு வயிறுகளையும் கழுவிவந்தாள் அன்னம்.

அன்னத்தின் பக்கத்து வீடு மாளிகை மாதிரி இருந்தது. அங்கும் இருவர் இருந்தனர். நொத்தாசியார் இரண்டு மக்களையும் வெளிநாடு அனுப்பிவிட்டார். பிடிக்க வேண்டிய இடங்களில் செல்வாக்கு செலுத்துவதில் வல்லர். அவரின் மனைவி யாருடனும் கதைப்பதில்லை. வேலைக்காரப்பிள்ளை நொத்தாசியாரின் கட்டுப்பாட்டில் இயங்கினாள். வெளிநாடு சென்று விட்ட தன் இரு ஆண் மக்களினதும் நினைவுகளில் நொத்தாசியாரின் மனைவி வாழ்ந்து கொண்டிருந்தாள்.

நொத்தாசியார் 82 வயதிலும் சூடு மாறமுன் பச்சைப் பாலைத் தன் கையால் கறந்து குடிக்கிறார். காலைக் கஞ்சிக்காக அன்னம்

வெளியில் சென்ற வேளையில் நொத்தாசியார் பச்சைப்பால் குடித்துவிட்டு நரைத்த கட்டை மீசையை தட்டிவிட்டு பெருத்த ஏவறை விட்டு வயிற்றைத் தடவியபடி எழுந்தபோது அன்னத்தின் தலையைக் கண்டவர் '' என்ன அன்னம் இன்னும் யோசிக்கவில்லையே'' எனக் கேட்டார். அன்னம் அவரின் வளவைக் கடந்து சென்றுவிட்டாள்.

''என்ன நொத்தாசியார், என்ன கறக்குது இந்தப் புள்ளி'' என்றபடி உள்ளே வந்தார். அவருடைய நெடுநாள் கூட்டாளி ''என்னத்தக் காணும் ஒரு பத்துப் பன்னிரண்டு கறக்குது சரியான கள்ளி ஒளிச்சுப் போடுதோ தெரியவில்ல''என்றார். நொத்தாசியார். ''மருமோன்ட சிவல பதினாறு பதினெட்டு மட்டுல கறக்குதென்டவன். உதக்குடுத்துட்டு இந்தியன்ட யேசில ஒண்டப் பாக்கட்டே நொத்தாசியார்'' என்றார் கூட்டாளியும் புறோக்கரும்.

''சேச்சே புள்ளையைப் போல இந்தப் புள்ளி, தடவித் தடவி வளர்த்துப் போட்டன் பாருங்கோ, உது கிடக்கட்டும்'' என்று மறுத்துவிட்டார் நொத்தாசியார்.

''அன்னத்தின் கடைசிப் பொடியன் கண்ணை மூடி ஒரு மாதம் ஆகி இருக்காது. அதனால் தான் அவள் எந்தத் தொழிலுக்கும் போகல்ல போல. பாவம் அவனும் அரச்சு அரச்சுக் கிடக்கான். பொண்ணாகப் புறந்தா இப்படித்தான்'' என்று அன்னத்துக்கு பச்சரிசி கொடுத்த பவளம் அன்னத்தின் நிலையைப் பற்றித் தனது கணவனிடம் கூறிக்கொண்டாள்.

அரிசியை மடியில் கட்டிக்கொண்டு அன்னம் திரும்பி வருவதைக் கண்ட நொத்தாசியார் ''உவண்ட பாடு இப்ப எப்படி, புக்க கட்டிப் போட்டியா? பத்துப்போட காசு தரட்டே?'' என்றார். அன்னம் பதிலேதும் இல்லாமல் குடிலுக்குள் புகுந்துகொண்டாள்.

''அந்தநாலு ஜீவன்களும் இருந்தா இந்தக் கிழடன் இப்படிக் கேட்டதற்கு இடுப்ப உடைச்சிரிப்பானுகள்'' என நினைத்தபடி சாயம் வெளுத்த அந்தப் புகைப் படங்களைத்தான் அவளால் பார்க்கமுடிந்தது.

ஊரில் உள்ள நிலத்தில் எப்படியும் முக்கால்வாசி நொத்தாசியாரின் சொந்தங்களின் பெயரில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்னம் குந்தி இருக்கின்ற நிலத்தையும் பிடிச்சுப் போடத்தான் அவர் அடிக்கடி

அன்னத்திடம் தூண்டில் போட்டுப் பார்ப்பார்.

அன்னத்தின் பையன்கள் இருந்த போது வாலைச் சுருட்டி வைத்த நொத்தாசியார் இப்பொழுது வாலை அடிக்கடி ஆட்டிப் பார்க்கின்றார்.

அன்னத்தின் கடக்குட்டி போகும்போது தனது செல்லம் என்னும் நாலுகால் ஜீவனை தூக்கிக் கொண்டு அன்னத்திடம் ''அம்மா நான் அடிபட்டா இவன் அந்த செய்தியைக் கட்டாயம் கொண்டுவருவான்'' என்று சொல்லிச் சென்றான். அவனுடைய வாயில் சக்கரை போடவேண்டும். அவன் அடிபட்ட போது அவனுடைய செல்லத்தின் இரண்டு பின் கால்களும் உடைந்து விட்டது.

அன்னத்தின் கடைக்குட்டி கண்ணை மூடு முன்பு தன்னுடைய செல்லத்தைத் தூக்கி நெஞ்சில் வச்சுக்கொஞ்சி ''அம்மாட்டப்போடா'' என்று சொல்லித்தான் உயிரைத் துறந்தான்.

பின் கால்கள் இரண்டும் உடைந்த நிலையிலும் ஒரு மாதமாக முன்காலை மட்டும் உபயோகித்து நழுவி நழுவி தனது எல்லைக் கோட்டை அடைந்தது. அந்த நன்றியுள்ள வாயில்லா ஜீவன்.

வெட்டி வந்த நறுவிலிப் பட்டையும் மருந்துத் துவயலையும் வைச்சுக் கட்டி தலையைத் தடவி விட்ட போது அந்த ஜீவனின் வால் சிறிது அசைவைக் காட்டியது.

அன்னத்தின் கடக்குட்டியின் செல்லப்பிராணியும் இப்பொழுது வாழப் பழகிவிட்டது. சற்று தொலைவில் உள்ள மெயின் வீதிக்கு போக அதற்கு ஆசை ஆனாலும் அன்னத்தைச் சுற்றிய படியே இருக்கும் அது.

நொத்தாசியார் தன்னுடைய புள்ளிப்பசுவில் பதினைந்து பதினாறு போத்தல் கறக்கும் முயற்சியில் தினமும் ஈடுபடுவார். ''சொல்லிப்போட்டன் புள்ளி கண்டுக்கென்று கூடக்குறைய ஒளிச்சியோ, கறைவை என்றும் பார்க்காமல் அறுவைக்குத்தான் கொடுப்பன், சொல்லிப் போட்டன்'' என்று சொல்லி இருகைகளாலும் மடிக்காம்பை இறுக்கி இழுத்தார்.

''இடிச்சி விடட்டே கிழட்குக்கு'' என்று நினைத்து அந்தப் பசு ''மரைக்கால்கணக்கில கறந்தாலும் மறக்கிறதான் இந்த கிழடுட வழக்கம்'' என நினைத்த பசு தலையை மேலும் "கீழும் அழகாக ஆட்டியது. கழுத்தில் கிடந்த சலங்கையின் ஓசை பக்கத்து வீட்டில் அன்னத்தின்

காலடியில் இருந்த செல்லத்தின் காதுகளில் ஏதோ செய்தியைச் சொல்லியது புள்ளியைப் போய்ப் பார்க்க செல்லத்திற்கு ஆசை. ஆனால் கிழவன் இரட்டக்கண் துவக்குப் போல ஆள், கொட்டான் எடுத்துகுட்டிப் போட்டான் என்றால்' என்று நினைத்து சும்மா இருந்தது.

புள்ளி மார்கட்டில் எஞ்சிய கோவா இலைகளை இதமாகச் சாப்பிட்டுக்கொண்டு இருந்தது. பக்கத்து சந்தியில் சைக்கிளில் வந்தவர் தடால் என விழுந்துவிட்டார். அந்தப்பசு சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தது, பாவம் அந்த மனிதனை அனேகமானோர் குடிகாரன் குடிகாரன் என்று திட்டித் திட்டி தட்டிக் கழித்துக்கொண்டு போனார்கள். ஏனோ தெரியவில்லை. என்னசொந்தமோ, பந்தமோ, அந்தப்பசு இரங்கியது. மடியில் இருந்த பால் சற்று மிதமாகச் சுரந்து வழிந்து கொண்டிருந்தது. அதனுடைய கண்கள் கலங்கி கண்களினூடே நீண்ட நீர்க்கோடுகள் உருவாகின.

யாராவது இந்த மனிதனுக்கு உதவமாட்டார்களா? என அதன் தாயுள்ளம் ஏங்கியது. வழியால் வந்த வயதுபோன ஒரு மீன் வியாபாரி மிகக்கவனமாக விழுந்து கிடந்த அந்த மனிதரைக் புரட்டி எடுத்து மண்ணைத்தட்டி நிமிர்த்திய போது, அவருடைய சாரன் மடிப்பிலே இருந்து மருந்து வில்லைகள் மஞ்சள், நீலம், வெள்ளை எனும் நிறங்களில் சிறிதும் பெரிதுமாக சொரிந்த வண்ணம் இருந்தது. வீழ்ந்த மனிதர் அப்போது தான் வைத்திய சாலையில் இருந்து டிக்கட் வெட்டிக்கொண்டு வந்திருந்தார். அந்த மீன் வியாபாரி தனது சொந்தப் பணத்தில் அந்த மனிதனை முக்சக்கரவண்டியில் ஏற்றி வைத்தியசாலையில் சேர்த்து விட்டு தனது வியாபாரத்தைத் தொடர்ந்தார். நொத்தாசியாரின் இரண்டாவது மகன் லண்டனில் பி.எச்.டி முடித்துவிட்டார். செய்திகேட்டு ''நான் இங்க மாட்டையும் மண்ணையும் கட்டியாளுறன், இவனுகள் புத்தகங்களைக் கட்டிப் பிடிச்சு கொண்டிருக்கிறானுகள், இவனும் ஒரு இளவு. வேலைக்காரப் பெட்டையும் ஸ்றைக்பண்றாள். அதுக்குள்ள புள்ளியும் பால் மறுக்குது. ''இனி பால் கறக்க மெசிந்தான் ஓடர் பண்ணும்'' என்று கூறியபடி புள்ளியின்மடியைக் கழுவிக் கழுவிக் கறக்கிற நொத்தாசியாரின் சுயநலத்தையும் நேற்றைய மீன் வியாபாரியின் பொது நலத்தையும்

பக்கத்து வீட்டு அன்னத்தையும் அவளோட இருக்கும் செல்லத்தையும் தன்னையும் பற்றி அசை போட்டது புள்ளி. எத்தனை புள்ளிகள் எடுத்தாரோ என்னமோ நொத்தாசியாரின் இரண்டாம் மகன் சமூகவியல், மானுடவியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி செய்தாரோ தெரியாது, படிப்புக்கூடியதால் பகல் முழுவதும் அமைதியாகத் திரிந்து கொண்டிருக்கிறார். என்று லண்டன் பல்கலைக்கழகம் அவரை விடுமுறைக்கு இலங்கைக்கு அனுப்பிவிட்டது.

''கிடக்கிற இளவோட உவனும் உருப்படிக்கு மட்டும் வாறானாக்கும், ஈட்டுக்குப் பிடித்த மெயின் வீதி வீட்டில் தங்க வைக்க வேண்டியதுதான் என நினைத்தவாறு நொத்தாசியார் புள்ளியில் கூடுதலாகக் கறக்கப் பார்த்தார். தருணம் பார்த்து சாணம் போட்டது புள்ளி. அதனுடைய பார்வையில் நொத்தாசியாருக்குரிய அந்த மாடின் சேவை முடிந்துவிட்டது. அது நொத்தாசியாருக்கான கணக்கை பூச்சியமாக்கியது. மடியைப் பிடித்த கையை எடுத்துவிட்டு சாணத்தைத் துடைத்துக்கொண்டு நிலத்தில் இருந்த சாணத்தையும் அள்ள முயற்சித்தார் அவர்.

சாணத்தை அள்ளக்குனிந்த நொத்தாசியார் பசுவின் பின் கால் உதறலில் பல அடிகளுக்கு அப்பால் பறந்து விழுந்தார். எஞ்சியிருந்த பற்களும் உடைந்து. வாய் பூட்டுக்கழண்டு விட்டது. வாய் ஆவண்ட படி இருந்தது.

புள்ளி அன்னத்தின் வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்து சலங்கையை ஒலித்தது அன்னத்தின் கடைக்குட்டியின் செல்லமும், அன்னமும் வெளியில் வந்தனர். புள்ளியின் செய்தியை அன்னம் புரிந்துகொண்டு புள்ளியின் கழுத்தில் அன்னம் செல்லத்தை ஏற்றி விட்டது.

எஸ்.எல்.எம்.எம், யூ.என், யூனிசெப் ஆகிய அமைப்புக்களில் கமறாக்கள் புள்ளியையும் செல்லத்தையும் கிளிக்செய்துகொண்டன.

புள்ளி செல்லத்தை மார்கட்டில் மெதுவாக இறக்கிவிட்டது. இரண்டு கால்களில் அதுவும் இரு முன்னங்கால்களில் நம்பிக்கையோடு அசையும் அந்தப் பிராணியைப் பார்த்து சந்தைக்கு வந்தவர்கள் வாயில் கை வைத்தனர்.

நொத்தாசியாரின் பி.எச்.டி.மகன் மெயில் வீதியில் இறங்கி வீட்டுக்கு போக வழிதெரியாமல் நின்றபோது ஒரு புதினத்தைப் பார்த்தார். இருவாலிபர்கள் விரைவாக மோட்டார் சைக்கிள்களில் பறந்து போனார்கள். இரண்டுகால் செல்லம் மயிரிழையில் தப்பியது. தூரத்தில் இன்னொரு வாகனம் அந்த இரு இளைஞர்களையும் துரத்திக்கொண்டு வந்தது, செல்லம் அருந்தப்பு தப்பியது. இதை புள்ளி அறிந்து கொண்டு விரைந்து வீதிக்கு வந்தது. அதனுடைய பாரிய உருவம் இளைஞர்களை துரத்தி வந்த பஜறோவை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. அந்த வாகனம் திடீரென அடித்த பிறேக் சந்தியில் இருந்த அனைவரின் கவனத்தையும் புள்ளியை நோக்கிச் செலுத்தச் செய்தது. வாகனத்தில் இருந்தவர்கள் தலையில் அடித்துக் கொள்கின்றனர். புள்ளி மெதுவாக தனது மூக்கினால் செல்லத்தை மெதுவாக மெதுவாக தட்டித் தட்டி அடுத்த பக்கத்தில் நின்ற நொத்தாசியாரின் பி.எச்.டி. மகனின் காலுக்கு அண்மையில் வைத்துவிட்டு, வாகனப் பக்கம் திரும்பி தனது சலங்கை ஒலியை ஒலித்தது. அங்கிருந்த அனைத்து பார்வையாளர்களினதும் மனங்களில் நல்லதொரு செய்தியை புள்ளி பதித்துவிட்டது. பஜறோவில் வந்தவர்கள் தங்களுடைய துவக்குகளில் இருந்த மகசீன்களைக் களட்டிய பின் அவற்றினை வாகனத்தின் கீழ்ப்போட்டு மீண்டும் மீண்டும் பல முறை டயர்களை அவற்றின் மேல் ஏற்றி துவக்குகள் துளாகிய பின் புள்ளியின் முதுகில் செல்லத்தை ஏற்றி வைத்து விட்டு திரும்பிச் செல்ல முயற்சித்தபோது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மோட்டார் சைக்கிள் சென்ற அந்த இரு இளைஞர்களும் அங்கு துவக்குகளை ஏந்திய படி திடீரென வந்தனர். புள்ளியின் பருத்த உடல் குறுக்கே நிற்கிறது செல்லம் ஸ்பிரிங் போல் இயங்கியது இருவருடைய துவக்குகளும் இயங்கினாலும் குறி தப்பிவிட்டது. இரண்டு துவக்குகளும் புள்ளியின் இரு கால்களின் அழுத்தத்தில் செயல் இழந்தன. மக்கள் வளைந்து நின்று புதினம் பார்க்கின்றனர். மோட்டார் சைக்கிள் இளைஞர்கள் செல்லத்தைத் தூக்கி புள்ளியில் வைத்தனர். மக்கள் அதையும் பார்த்துக் கொண்டு நின்றனர். இளைஞர்களும், மக்களும், பி.எச்.டி.யும் மலைத்து நிற்க புள்ளியும், செல்லமும் நிதானமாக அசைகின்றன.

# அசலும் நகலும்

அது ஒரு அழகிய சிறிய குடும்பம். அம்மா, அப்பா, யூலி மூவருந்தான். ஆசையாக அந்தச் சின்னமகள் யூலையில் பிறந்ததால் அவளை யூலி என்று செல்லமாக அழைத்தனர். யூலியின் தந்தை ஒரு கம்பியூட்டர் எஞ்சினியர். யூலி பிறந்து எட்டு மாதங்களாக இருந்தபோ:து அப்பா சிங்கப்பூருக்குப் போய்விட்டார். நல்ல சம்பளம் சிங்கப்பூர்ச் சந்தையில் புதிதாக அறிமுகமாகும் சிறந்த பொருட்களால் யூலியின் வீடு நிரம்பி வழிந்தது.

யூலியோடு விளையாட அழகிய நாய்க்குட்டியும் ஒன்று இறக்குமதி செய்யப்பட்டது. அது ஜனவரியில் வந்து சேர்ந்ததால் அதனை ஜானு என்று அழைத்தனர்.

விதம் விதமாகச் சமையல் செய்து பார்ப்பதும், செல்ல மகளையும் ஜானுவையும் கவனிப்பதும் வீட்டை அழகு பார்ப்பதும் தாயாரின் வேலை. மகளோடும் மனைவியோடும் தினமும் ரெலிபோன் கதைப்பதில் மாதச்செலவு இலங்கைப் பணத்தில் இருபத்தையாயிரம் அப்பாவிற்குச் செலவாகிறது.

யூலியும் ஜானுவும் சோபா செட்டில் இருந்தபடி ரீ.வி. பார்ப்பதும் விளையாடுவதும் வழக்கம். ஜானுவுக்கு அம்மா பல்தீட்டி விடுவார். மகள் யூலிக்குச் செய்யும் அத்தனை பணிவிடைகளையும் நாய் ஜானுவுக்கும் செய்யப்படும்.

ஜானு யூலியை விட விரைவாக முதிர்ச்சி அடைந்து விட்டது. அதற்கு இணையன் இங்கு இல்லை. மீண்டும் அப்பாவிடம் அனுப்பி வைக்க அம்மா முயற்சிகள் மேற்கொண்டாள். இப்பொழுது மகள் யூலியோடு விளையாட ஜானு இல்லை. யூலி ஜானுவைக் கேட்டு அடம்பிடித்தாள்.

"இல்லடா கண்ணு சிங்கப்பூர்ல அப்பா ஜானுவைப் பாரமெடுத்து அம்மாவாக ஆக்குவார். அப்புறம் வடிவான குட்டிகளோடு ஜானு வருவாள்" என்று யூலியிடம் கூறினாள் அம்மா.

ஜானு சிங்கப்பூருக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது. ஆக

வேண்டியவற்றையெல்லாம். அப்பா வைத்தார்.

மாதங்கள் கடந்தன குட்டிகள் பிறந்தன. சிங்கப்பூரில் சாஸ் நோய் பரவும் அபாயம் பற்றி பத்திரிகைகள் தொடர்ந்து எழுதின. இதனை அடிப்படையாக வைத்து மிருகங்கள் நாட்டுக்கு நாடு இடமாற்றம் செய்வது தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது.

ஜானு இல்லாமல் இங்கு யூலிக்கு காய்ச்சல் வந்துவிட்டது. அவளும் அம்மாவும் வைத்தியசாலையில் இருக்கும் செய்திகேட்டு அப்பா பதறிப்போனார்.

றோபோக்கள் செய்வதில் யூலியின் அப்பா வல்லவர். அசலில் தனதுமகள் யூலியைப் போன்று ஒரு றோபோவை அவர் வடிவமைத்து யூலியின் குரலைப் பதிவுசெய்து மகளுக்கு அவர் அனுப்பி வைத்தார்.

பிள்ளைக்கு ஒரு குறையும் வரக்கூடாது என யூலியின் தாய் இறைவனை வேண்டியதோடு விரதமிருந்தாள்.

சிறிய குட்டிகளுடன் ஜானுவை அனுப்பி வைக்கச் சிங்கப்பூர் அரசு தடை விதித்து இருந்தது. அதற்கான அறிவுறுத்தல் கடிதத்தை யூலியும் கண்ட பின்னர்தான் காய்ச்சல் குறைந்தது. வீட்டிற்கு வந்தது சேர்ந்தபோது யூலியை இன்னொரு யூலி வரவேற்றது. அசல் எது நகல் எது என்று யாருக்கும் புரியவில்லை. மூவரும் கலகல எனச் சிரித்தனர்.

ஆனால் அசல் யூலிக்கு மனதில் ஏதோ ஒரு கீறல். கொஞ் சமாவது என்னைவிட அழகு குறைவாக அப்பா இந்த நகலைச் செய்திருக்கக்கூடாதா? என அவள் மனதில் ஒரு சிறுசலனம்.

இப்போது அம்மாவுக்கு அசலுக்கும் நகலுக்கும் ஒரே விதமான உடை தயாரிக்கும் வேலை தொடங்கிவிட்டது. இதுவும் யூலிக்குப்பிடிக்கவில்லை.

தனது புகைப்படம் கூட அழகாக இருக்கவேண்டும். என நம்பும் ஒருவன் தன்னைப் போல் இன்னொருவன் இருப்பதை விரும்புவது கடினமானதென மக்கள் கூறுகின்றனர்.

ஜானுவுக்கும் குட்டிகளுக்குமான விசா கிடைத்துவிட்டது. ஜானு வரும் செய்தி யூலிக்கு இப்போது இனிப்பாக இல்லை. ஆனால் ஜானுவின்

குட்டிகளை அணைக்க அவள் துடித்தாள். ஜானுவுக்காக ஏங்கியவள் இப்போது அதை ஏன் வெறுக்கிறாள். தான் காய்ச்சலாக இருந்தபோது சற்று இளைத்திருந்தாள். ஆனால் அந்த றோபோ தன்னைப்போலவே நல்ல குரலும் அழகும் உடையதாக இருக்கிறது. மூச்சு இரைக்காமல் பாடுகிறது. என யூலி நினைத்துப் பொறாமைப்பட்டாள். அவள் நினைத்தது போலவே ஜானு தன்னைவிட றோபோவை அதிகம் விரும்பி விட்டால் பாவம் யூலி தொய்ந்து போவாள்.

யூலி ஜானுவை வெறுத்தும் குட்டிகளைக் கனிவாகவும் பார்த்தாள். ஒரே நேரத்தில் இருபார்வை பெண்களுக்குப் பிறப்பிலேயே வந்து விடுகிறதோ என றோபோ யூலி நினைத்தது. யூலி நினைத்தபடியே நடந்தது. ஜானு றோபோவுக்கும். யூலி குட்டிகளுக்கும் என்று ஆகிவிட்டது.

உயர்திணைக்கும் அ∴றிணைக்கும் இடையே பனிப்போர் தொடர்ந்தது. யூலி நீண்ட நாட்களாக யோசித்து யோசித்து ஒரு முடிவை எடுத்து விட்டாள். றோபோவை அழித்து விடுவதுதான். அவளின் திட்டம். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி.....

அப்பாவை மிஞ்சிய பிள்ளையாக அவள் வருவாளோ? அப்பாவின் அளப்பரிய மூளை இன்னும் அவளுக்கு வாய்க்கவில்லை. ஆனாலும் அவள் பிஞ்சிலே பழுத்தவளும் அல்ல. காலத்துக்காக காத்திருந்தாள் மிக மெதுவாக ஜானுவை றோபோ மீது ஏவி விட்டாள். ''மந்திரத்தை முணுமுணுத் தேட்டை வரிசையாக அடுக்கியதன் மேல்....'' ஜானு நகல் யூலியுடன் சேர்ந்து விளையாடும் நேரத்தை மெல்ல மெல்ல குறைத்து வந்தது.

நகல் யூலி நிலைமைகள் எல்லாவற்றையும் குறிப்பெடுத்து வைத்திருந்தது. எதிர்வு கூறும் சக்தியுடையதாக இந்த றோபோவின் மூளை படைக்கப்பட்டிருந்தது. தன்னுடைய பாதுகாப்பினை எப்போதும் உறுதி செய்து கொண்டே கருமமாற்றும் பண்புடைய றோபோவாக அது இருந்தது.

எடுத்ததற்கெல்லாம் முகத்திலே துப்பிவிடுவதும் அதனை வழித்தெறிந்தபடி அடுத்தவர் விழித்துக்கொண்டு நிற்பதும் தமிழ் சினிமாப் படங்களில் நாம் அடிக்கடி பார்க்கும் காட்சிகளில் ஒன்றாகிவிட்டது.

இதனை நினைத்த யூலியின் அப்பாவின் சிந்தனையில் அடிப்படையில் பல தத்துவங்களை தனது படைப்பில் புகுத்தியிருந்தார்.

மனித மனங்களில் எழுகின்ற சிந்தனையின் எல்லைக்கு வரையறை இல்லை. மனித மூளையின் உண்மையான இயல்பு நிலைக்கும் அதன் நரம்புக் தொழிற்பாட்டிற்கும் இடையே உள்ள இடைத்தொடர்பு. அதனுடைய சுரப்புக்கள், தாக்கங்கள் என்பன இன்னும் விஞ்ஞானிகளுக்கு ஒரு கேள்விக் குறியாக உள்ளது.

றோபோ யூலி மிகவும் விசித்திரமாகத் தொழிற்படுகிறது. தன்னைச்சூழ உள்ளவர்களின் தொடர்புகளை ஒரு சந்தோசமானதாக ஆக்குவதற்கான ஆராய்ச்சினையும் அது செய்தது. அந்த றோபோ தனக்குள்ளேயே ஒரு திட்டத்தினைத் தயாரித்து யூலியை அது தனது பக்கம் கவர்ந்து கொள்ள முயற்சிசெய்தது. அது ஒரு நாள் தனது இயக்கத்தை முழுமையாக நிறுத்திவிட்டது.

மனிதன் தனது இயக்கத்தை நிறுத்தினால் நிலத்திற்கு இரையாகிவிடுவான் ஆனால் றோபோவை மீண்டும் இயக்கமுடியும். இப்போது ஜானுவும் யூலியும் மிண்டும் நல்ல நண்பர்களாக வாய்ப்பு உண்டாகியது என யூலி நினைத்தாலும் குட்டிகளை அது பராமரிப்பதிலும் கவனமெடுத்து வந்ததை யூலி அவதானித்தே வந்தாள்.

றோபோவின் இயங்கு விதிகளை பற்றி அம்மாவோடு அப்பா உரையாடியே வந்திருந்தார். றோபோ இயங்காத நிலையில் வீட்டின் கலகலப்பு குறைந்துவிட்டது. விட்டுப் பிடிப்போம் என அந்தப் போலி யூலி மௌனிதிருந்தது.

யூலி ஜானுவுக்கும் குட்டிகளுக்கும் கீயூ டெக்ஸ் அடித்துக் கொண்டிருந்தாள். கீயூடெக்ஸ் மனம் அறையெல்லாம் பரவியிருந்தது. தனக்கும் அடித்து அழகு பார்க்கமாட்டாளா என றோபோ ஏங்கியது. ஆனாலும் தன் மானம், வரட்டுக்கௌவரம்... மனித முளையில் சாயல் வந்துவிட்டாலே மறுபுறும் கேட்பானேன் இம்..... என்று இருந்துவிட்டது. அது.

அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகருமாம், ஆனால் காலமும் எல்லாவற்றையும் கரைக்குமாமே, ஜானுவும் குட்டிகளும்

இப்போது விளையாடக் தொடங்கி விட்டன. குட்டிகளில் தூசு விழுந்தாலும் தட்டி விடும் அளவு பண்புள்ள தாயாகிவிட்டது அது.

யூலி பாடசாலை செல்ல ஆரம்பித்து விட்டாள். பாடசாலை நண்பிகளின் நாட்டம் மாறியது வீட்டிலுள்ள உன்னதமான பொருட்களை காட்சிப்படுத்தும் நாள் வந்தது. யூலி தனது றோபோவை அங்கு அறிமுகப்படுத்தியதும் பாடசாலை முழுவதும் ஆச்சரியம் அடைந்தது. தான் தயாரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்த நாள் முதல் பாடசாலைக்கு வந்த நாள் வரை அந்த றோபோ பதிவு செய்து வைத்திருந்த யாவற்றையும் கதை கதையாகச் சொன்னது.

றோபோவின் கதைகள் இலங்கையின் முழுப்பத்திரிகைகளும் முதற்பக்கத்தில் கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப்பட்டது. றோபோவுடன் யூலி புகழின் உச்சியில் பறந்தாள் யூலியின் அப்பா நாட்டுத் தலைவரின் தேசிய விருதைப் பெறுவதற்காக சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் ஏறுகின்றார்.

- முற்றும் -



பிறப்பு : 1950 - 03 - 18
தாய் : திருமதி. வள்ளியம்மை
தந்தை : திரு. முருகேசு
பிறந்த இடம் : பேத்தாழை வாழைச்சேனை.
ஆரம்பக் கல்வி : மட் / வாழைச்சேனை, இந்துக்கல்லூரி.

இடைநிலைக் கல்வியை மட் / வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றதின் பின்னர் வாழைச்சேனை காதிதாலையில் 14 வருடங்கள் தொழிலில் ஈடுபட்டு, 1986 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமானி, வியாபார முகாமைத்துவ சிறப்புப் பட்டதாரியானார். பின்னர் 1988 இலிருந்து மட்/ வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக்கடமையாற்றிய இவர், 1996 இல் இருந்து அதிபராகக் கடமையாற்றுகிறார்.

பாடசாலைப் பருவத்திலிருந்தே பேச்சுவன்மை மிக்கவராக விளங்கிய இவர், 1990 இல் இருந்து இலக்கிய ஈடுபாடு கொண்டு கவிதை, சிறுகதை ஆகிய வற்றை ஆக்கியிருந்தும் 2003 இல் கலாநிதி செ. யோகராசா அவர்களின் உந்துதலினால் கோறளைப்பற்று பிரதேசசெயலக கலாசார பேரவையின் ஊடாக இவரது " ம றை மு க ம் " எனும் முதலாவது சிறுகதைத் தொகுப்பு வெளியானது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாழர் பேரவையின் ஒத்தாசையின் மூலம் இரண்டாவது சிறுகதை தொகுப்பான "மறுபக்கம்" ஆகிய இந் நூல்வாசகராகிய உங்கள் கைகளில் தவழுகின்றது.

**மட்டக்களப்பு**
**மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை**

*துர்க்கா அச்சகம் 334, திருமலை வீதி, மட்டக்களப்பு.*